REGD; M' 4843

# திராவிடநாடு

விலை அணா 2   ஆண்டுசந்தா ரூ 7.   இலங்கை 15 சதம்   மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 14—11—48 | இதழ் 22

## அறப்போர் வீரர்கள்



உட்கார்ந்திருப்பவர்கள்:—சாஜோகபீர், அலமேலு அம்மையார், கலைச்செல்வன்.

நிற்பவர்கள்:—சி. எஸ். திராவிடமணி, ஓ. சி. பாண்டியன்.

## கம்பர் மாநாடு

4-ம் பக்கத் தொடர்ச்சி

என்றும் தயாராக இருக்கிறோம். நாம் காட்டும் வெறுப்பின் அறிகுறியெல்லாம் கதையின் போக்கிற்காக—அது உண்டாக்கிய இழிந்த விளைவுகளுக்காக—வெறுப்பின் அறிகுறியாகத்தான் நெருப்பிலிடுவோம் என்று கூறுகிறோம். நெருப்பிலிடுவது என்பது வெறுப்புணர்ச்சியின் அறிகுறி முறையேயல்லாது வழக்கமாகக் கொள்ளும் செயலாற்றுமுறையல்ல என்று திரும்பத் திரும்பப் பல்லாயிர முறைகள் ஏட்டின் மூலமாகவும், சொல்லின் மூலமாகவும் விளக்கி வந்துள்ளோம். இதைக் கம்பராமாயண ரஸிக சிகாமணிகள் கவனிக்க மறுக்கிறார்கள். இதற்குக் கம்பர் கூறிய உவமையைத்தான் ரஸிகர்களுக்குப் பரிசாக நல்கவேண்டும். இராமன் விட்ட அம்பு தாடகையின் மார்பைத்துளைத்து எப்படிப் பின்புறமாக ஊடுருவிச் சென்றது என்பதைத் கூற வருமிடத்தில் 'கல்லாப் புல்லருக்கு நல்லோர் சொன்ன பொருளேனப்போயிற்றன்றே' என்று கூறுகிறார். அதுபோன்று நாம்சொல்லும் ஒவ்வொரு காரணமும் ரஸிகர்களின் ஒருகாதில் நுழைந்து மற்றொரு காதின் வழியாக வெளியேறி விடுகிறது. இந்த நிலைக்குப் பரிதாபப் படுவதைத் தவிர வேறுவழியில்லை!

நாம் கூறுகிறோம் கம்பனின்சிறந்த அணியழகையும், உவமையழகையும் சொற்பொலிவையும், பொருளாழத்தையும், வேண்டிய மட்டும் நுகருவதைத்தடைசெய்யவில்லை; கதையால் ஏற்பட்ட குருட்டுப் பக்தியையும், கதையின் விளைவால் ஏற்பட்ட மடைமையையும் போக்குங்கள் என்று. கம்பனை மக்களிடம் காட்டும் முறையை அறிவாராய்ச்சிக்கும் காலத்திற்கும் ஏற்ற தன்மையில் மாற்றிக் காட்டுங்கள் என்று கூறுகிறோம். குருட்டுப் பக்தியைப்போக்கி நல்லவற்றை காலத்திற்கு ஏற்றவிதத்தில் உருவாக்குங்கள் என்று கூறுகிறோம். குற்றங் குறைகளை ஒருங்கே காணுங்கள்; குற்றங்களைக் கடிந்துரையுங்கள், குணங்களைப் போற்றுங்கள் என்று அறிவுறுத்துகிறோம். கதையையும், போக்கையும், விளைவையும் சரியென்று கூறி, கம்பனைக் குற்றமற்றவன், குறையற்றவன் என்று மொழிந்து, இல்லாததை இருப்பதாகவும், பொல்லாததைப் பொருந்துவதாகவும் செப்பி பாமர மக்களைக் கலைப் புரட்சிக்காரர்கள் மீது ஏவும்போதுதான் புத்துலகச் சிற்பிகள் காரணங்காட்டிக் கம்ப இராமாயணத்தைத் தீயிட்டுக் கொளுத்தி தீயவற்றை வெறுப்பதன் மூலம் நல்லுணர்ச்சியைப் பரவச்செய்ய, நல்லவேலைகளில் ஈடுபட வேண்டியவர்களானார்கள். ''தீயிட்டுக்கொளுத்துவோம்'' என்ற வெறுப்பைக்காட்டும்அறிகுறிச்சொற்றொடர்நாட்டில் கருத்துமாற்றத்தை உண்டாக்கியிருக்கிறது என்பது போலீஸ் பாதுகாப்பில் நடந்தமாநாடேநன்குவிளக்கிக் காட்டுகின்றது.

கம்ப இராமாயணத்தைக் குறை கூறும் 'குற்றத்திற்காக' நம்மைக் கடிந்துரைப்பதற்கென்றே கூட்டிய மாநாட்டின் தலைவர் யார் தெரியுமா? கம்ப இராமாயணத்திற்கு 'ரிப்பேர் ஷாப்' வைத்திருக்கும் ரஸிக மணி டி. கே. சிதம்பரநாதமுதலியார். நாமாவது கம்ப இராமாயணத்தை காலத்திற்கும் கருத்திற்கும் பொருந்தும் பகுதிகளைப் பொருந்தக்கூடியமாதிரியில் வையுங்கள் என்றுவெளிப்படையாக — கண்ணோக்கத்தோடு — சீர்திருத்தமுறையில் கூறுகிறோம். இதற்குக் கம்பர் ஏடுதாங்கிகளின் எக்காளம் தொண்டை கிழியு மட்டும் கிளம்பிற்று. ஆனால் மாநாட்டுத்தலைவர்—ரஸிகமணி இருக்கிறாரே அவர் தானே கம்பனின் 'மறு அவதாரம்' என்ற முறையில் பல பாட்டுகளைத் தூக்கி கூவம்நதியில் வீசிவிட்டார். காலத்திற்குப் பொருத்தமில்லாதவை—தேவையில்லாதவை என்று கருதி தூக்கி எறிந்தாரா? இல்லை. கம்பர் அவைகளைப் பாடவில்லை என்று சொல்லி ஆயிரக்கணக்கான பாட்டுகளைத் தூக்கி எறிந்தார். நம்மைக் காயும் காவியம் தாங்கிகள் அது கண்டு கவலைப்பட்டனரா? வெறுப்புக்காகச் செய்யும் அறிகுறி கண்டே மிரளும் அவர்கள் ரஸிகமணியின் செய்கைக்குக் கலங்கினரா? கம்ப இராமாயணத்திடம் உள்ளபடியே அவர்கள் கொண்டிருக்கும் பக்தி உண்மையுடையதென்றால் எதிர்த்திருக்கவேண்டாமா? எதிர்ப்புச் சொல் ஒன்றாவது உண்டா மாநாட்டில்? கம்ப இராமாயண ஆதரிப்பாளரின் பக்தியையே நாம் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. எதிர்ப்புக்கும்—ஆதரிப்புக்கும் உள்ள காரணங்களையே கண்டறியமுடியாத கபோதிகள் 'மடையர்களா' காரணங்காட்டி மறுக்கத்தெரிந்த கலைப் புரட்சிக்காரர்கள் 'மடையர்களா' என்பதைப் போதை தெளிவடையும்நேரத்திலாவது ரஸிகமணிகள் சிந்தித்துப் பார்க்கட்டும்.

கண் கண்ட கம்பர் தீட்டிக்காட்டும் கம்ப இராமாயணத்தைப் பாருங்கள்.

"ஒரிஜினல்" கம்பர் பாடிய இராமாயணத்தில் சிறப்புப்பாயிரம் 11 பாடல்களும், ஆற்றுப் படலம் முதல் பரசுராமப் படலம் முடிய 22 படலங்களிலுமுள்ள பாடல்களும் சேர்ந்து பாலகாண்டத்தில் 1420 பாடல்கள் இருக்கின்றன. இவற்றில் 'இமிடேஷன்' கம்பர் ஒப்புக்கொண்டவை 169. இராமாயணத்தில் சேராதவை என்று, தள்ளியவை 1250, 'ஒரிஜினல்' கம்பர் அப்படிப் பாடியிருக்கமாட்டார் என்று 'இமிடேஷன்' கம்பர் திருத்தியுள்ள பாடல்களின் தொகை 69.

(5-ம் பக்கம் பார்க்க)

16-ம் பக்கத் தொடர்ச்சி

னர் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவும் முனைகிறார்களா என்பதை இவர்கள் கற்றிருப்பார்கள் என்றே நம்புகிறோம். இது ஒன்றை மட்டும் என்றும் மறக்காமல் செயலாற்றுவதின் மூலந்தான், கானன்வெல்த் மாநாட்டில் பேசப்பட்ட பேச்சுகளையும் செயலில் காட்டமுடியும்.

❋

### முதற் கடமை.

உற்பத்திசெய்தவனுக்குத்தான் பொருள்கள் சொந்தமானவை. துரதிருஷ்டவசமாக எந்தச்சகாப்தத்திலும் நிலைமை அப்படி இல்லை. ஒருசிலர் உழைக்க வேறு சிலர்தான் அனுபவிக்கிறார்கள். இது துரோகமாதலால் இதை நீடிக்க விடக்கூடாது. தொழிலாளி உற்பத்தி செய்யும் அவ்வளவு பொருள்களும் அல்லது ஏறக்குறைய அவ்வளவு பொருள்களும் அவனையே சேருமாறு செய்வதுதான் சர்க்காரின் நியாயமான முதற் கடமையாயிருக்க வேண்டும்.

அபிரகாம்லிங்கன்.

# கம்பர் மாநாடு தரும் காட்சி

[இரா. நெடுஞ்செழியன்]

கம்பர் மாநாடு — ஆம் 4 வது மாநாடு சென்னையம்பதியிலே நடந்தேறிவிட்டது; வெற்றிகரமாகத்தான்! இதுகண்டு கம்பர் காவியம் தாங்கிகள் களிக்கூத்தாடுகின்றனர்; ஏடு தாங்கிகள் எக்கொலி கொட்டிப் பூரிக்கின்றனர்.

மூன்று நாள் கொண்டாட்டம்! சென்னை 'அரசவிருந்து மாளிகையிலே' புலவர் சிகாமணிகளின் கூட்டுறவிலே; மைலாப்பூர் மாம்பலம் தயவுடன், மந்திரிமார்களின் ஆதரவுடன், போர் வீரர்கள் புடைசூழ, போலீஸ்காரர்கள் பாதுகாக்க நடந்தேறியிருக்கிறது. கம்பர் மாநாட்டுக்காக—அதுவும் மக்கள் கவியாகிய கம்பரைப் பாராட்டுவதற்கென்று கூட்டப்பட்ட மாநாட்டுக்கா இவ்வளவு பாதுகாப்பு என்று கேட்கத் தோன்றும். ஆம்! அதற்கேதான்! வேறு நாட்டிலா? இல்லை! சென்னையம் பதியிலேதான்!

'மாம்பலத்தார்க்கும்'— 'மைலாப்பூரார்க்கும்' மட்டும் உரிய கவி எப்படி மக்களிடையே உலவ முடியும். அவர்தான் எப்படி உலாவுவார்! அவர்கள்தான் எப்படி உலாவ விடுவார்கள்! கம்பர் சாமான்யமானவரல்ல, அரச போக போக்கியங்களை அனுபவித்தவர்! அவரது இராமாயணமும் சமான்யமானதல்ல. ஐம்பதினாயிரம் அடிகளைக்கொண்டது— அரியின் அவதாரத்தை ஆட்கொண்டது. இப்படிப்பட்ட கவிச் சக்ரவர்த்தி கம்பரைப் பற்றியோ, கம்ப இராமாயணத்தையோ எப்படி சாமான்யமாகக் கருத முடியும்!

'கம்பரஸம்' பருகுவோர், அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டே இந்த மாநாட்டிற்குள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். விருந்துமாளிகையிலே கம்பரஸம்! ரஸத்தைப் பருகிப் பழக்கப்பட்டவர்களுக்கே இடம்! இந்த ரஸிகக்கூட்டத்திற்கு ரஸிகமணி டி. கே. சி. தலைவர்! 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும்' என்ற பழமொழிக்கொப்ப தக்கப் பாதுகாப்பு இருக்கும் போதே வேண்டியமட்டும் பருகிவிடலாம் என்று கருதி, கம்பரஸத்தை மொந்தை மொந்தையாக அள்ளிப் பருகிவிட்டு 'வசைச்சிந்து' நன்றாகப் பாடியுள்ளார்கள். இவ்வாண்டு தயாரிக்கப்பட்ட கம்பரஸம் சற்றுக் கார சாரமாகவே இருந்ததனால் போலும், ரஸிகர்கள் அனைவரும் அதோடு இரண்டறக் கலந்து, கம்பர் காட்டிய வழி இதுவென்றும், அதுவென்றும் ஆளுக்கொரு விதமாகக் காட்டி, உள்ளதை இல்லதாகவும், இல்லதை உள்ளதாகவும் இயம்பும் அளவுக்குச் சென்றிருக்கிறார்கள். அதுதானே போதையின் இலட்சணம்! கம்பரஸ போதை ரஸிகக்குழுவினரை அந்த அளவோடு மட்டும் பாடச் செய்யவில்லை; வழியிலே போய்க்கொண்டிருந்த நல்லவர்களை வம்புக்கிழுக்கவும் செய்திருக்கிறது. கம்பரஸக் குடியை ஒழிக்கும் சீரிய தொண்டிலீடுபட்டிருக்கும் சிலர்களை, வாய்க்கு வந்தபடி எல்லாம் வசைமாரி பொழிந்திருக்கிறார்கள்; தக்க பாதுபாப்பு இருக்கிறது என்ற எண்ணத்தால். கானக்குயில் எம். எஸ். சுப்புலட்சுமி பாட, நடன மயில்கள் ஆட, ரசிகமணி டி. கே. ஸி. தாளம்போட, கல்கி லிமிடெட் கம்பெனியார் தலையாட்ட, மந்திரிமார்கள் மகிழ 'கம்பர் கூத்து' முடிவடைந்துள்ளது.

இவ்வாண்டு கம்பர் மாநாட்டை வெற்றிகரமாக நடத்திவிட்டதாகவே கம்பரடிப் பொடியாழ்வார்கள் அனைவரும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். கம்பர் மாநாட்டிற்கு மக்கள் அனுமதிக்கப்படவில்லை. இது இவ்வாண்டின் விசேஷ நிகழ்ச்சி. மக்கள் அனுமதிக்கப்படவில்லை என்பது மட்டுமல்லாமல் அடித்தும் துரத்தப்பட்டிருக்கிறார்கள். இதற்குப் பெயர்தான் வெற்றி!

மக்கள் காணக்கூடாத அளவுக்கு மாநாட்டிலே என்ன ரகஸியம் அமைந்திருந்தது? பெயர் கம்பர் மாநாடு—நாட்டுக் கவிக்கு ஒரு பாராட்டு மாநாடு! நாட்டுக்கவி மக்களுக்குரியவர்தானே! பின் ஏன் மக்கள், மாநாட்டிலே கலந்து கொள்ள மறுக்கப்பட்டார்கள்? மக்களிடத்திலே மாநாட்டுக்காரர்களுக்கு அச்சமா? அச்சமிருப்பின் மாநாடு கூட்டுவானேன்? ரஸிகர் கூடிய அந்தக் கூத்துக்கு மாநாடு என்று பெயரிடாமலாவது இருந்திருக்க வேண்டும் அல்லது மக்கள் அச்சத்திற்குரிய காரணத்தையாவது போக்கியிருக்கவேண்டும். அல்லது நாட்டுக்கவிஞர் கொண்டாட்டத்தில் மக்களுக்கு அன்பு பிறக்கவாவது செய்திருக்கவேண்டும். இவை ஏதும் செய்யாமல் குண்டுச் சட்டிக்குள்ளே குதிரை யோட்டி விட்டோம் என்று கும்மாளம் அடிப்பதில் கோழையின் குணம் படிந்திருக்கிறதே யொழிய வீரனின் விவேகம் கலந்திருக்கவில்லை!

கம்பரடிப் பொடியாழ்வார்கள் மாநாடு கூட்டிய இலட்சணத்தை நாம் அல்ல—அந்த இனத்தைச் சேர்ந்த 'பாரததேவி' காற்றாடியார் கடற்காற்றிலே சுழற்றி விடுகிறார் பாருங்கள்:—

“கம்ப இராமாயணத்தை நானே வாசித்து அதன் சுவையை அனுபவிக்கக் கூடிய அளவுக்கு எனக்குத் தேர்ச்சியில்லை. அதைப் பற்றி மற்றவர்கள் செய்யும் வியாக்யானத்தைக் கேட்கவேண்டுமென்ற ஆசை எனக்கு உண்டு. அந்த ஆசையுடன் மாநாடு நடந்த இடத்திற்குப் போனேன். ஆனால், தமிழ் இலக்கியத்தை ரஸிப்பதற்காக நடத்தப்படும் ஒரு மாநாட்டில் போலீஸ் பாரா இருந்ததைக் கண்டு எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. அழைப்பாளர்கள்தான் உள்ளே அனுமதிக்கப் பட்டார்கள். அழைப்பாளர்கள் தான் உள்ளே வரலாமென்றால் மாநாட்டைப்பற்றிப் பத்திரிகைகளில் இப்படிப் பிரமாதமாக விளம்பரம் செய்திருக்கவேண்டியதில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் போலீஸார் வெளியில் நின்றுகொண்டிருந்த ஜனங்களைத் தடியால் அடித்துக் கூடத்துரத்தினார்கள்” என்று எழுதி இருக்கிறார்.

இது கம்பரைக் 'காயும்' வம்பர்கள் அளந்துவிடும் சரடு அல்ல. கம்ப நாட்டாழ்வாரின் திருக்கூட்டத்தைச் சேர்ந்த “பாரத தேவி” யாரின் 'காற்றாடியார்' சுழற்றும் கடும் வீச்சாகும். கவிச்சக்ரவர்த்தி கம்பர்மாநாடு நடந்தேற வேண்டுமானால் இத்தகைய 'ரத, 'கஜ, துரக, பதாதிகளின்' பாதுகாப்புத் தேவைப்படுகிறது போலும். குறிப்பிட்ட சிலர் மட்டும் கூடியிருந்து நடத்திய சிறுகூட்டத்திற்கு இவ்வளவு விளம்பரம் ஏன் என்று அந்தக்குற்றத்தைச்

செய்வதில் பரம்பரைப் பழக்கம் பூண்ட பாரததேவியாரே குறிப்பிடுகிறார்.

“அழைப்பாளர்கள்தான் உள்ளே வரலாமென்றால், மாநாட்டைப் பற்றிப் பத்திரிகைகளில் இப்படிப் பிரமாதமாக விளம்பரம் செய்திருக்க வேண்டுவதில்லை” என்று அழுத்தந் திருத்தமாகக் ‘காற்றாடியார்’ ஒலித்துக் காண்பித்துள்ளார். மாநாட்டின் பெருமையை உலகறியச் செய்ய, ‘விளம்பரம்’ வேண்டிய அளவுக்கு வேலை செய்திருக்கிறது. இருந்தும் சரக்கு விலை போகவில்லை. விலை போகாச் சரக்குக்கு விலை கூறத் திறமையான தரகர்கள் அமர்த்தப் பட்டார்கள். அந்த நிலையிலும் கடையில் கூட்டம் சேரவில்லை. தேவையற்றசரக்கு; எனவே விலை போகவில்லை! மாநாட்டிற்குத் தலைமை வகித்த ‘திருவாளர்’ டி. கே. சி. “பத்திரிகாசிரியர்களின் ஆதரவு கம்பனுக்கு இருக்கும் போது, இனிக் கஷ்டமில்லை” என்று தம் முடிவுரையில் பெருமூச்சு விட்டுக் கூறிவிட்டார். கம்பனைக் காப்பாற்றப் பத்திரிகைகளின் கட்டுப்பாடான ஆதரவு ஒருபுறம் — போலீஸ் பாதுகாப்பு மற்றோர் புறம். இந்தச் சூழ்நிலையில் கம்பர் மாநாடு ‘வெற்றிகரமாக’ நடைபெறாமல் வேறு எவ்விதம் நடைபெறும்!

மாநாடு கூட்டிய ரஸிக சிகாமணிகள் கம்பர் காவிய ரஸத்தின் விறுவிறுப்பை விரித்துக் கூறுவதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. அவர்கள் கூடியிருந்தது விருந்து மாளிகையில். கம்பரஸத்தின் சுவை பற்றிய ஆலாபனம் இருப்பதிலே தவறில்லை. கல்கியார் கூறியுள்ளது போன்று கம்பராமாயணம் கொடுக்கும் போதை அளவை மீறிவிட்ட காரணத்தாலோ என்னவோ கலையில் புத்துலகத்திற்கான புரட்சியைக் காண விரும்பும் நல்லறிவாளர்களை, வசை பாடித் தீர்த்துள்ளார்கள் மேடை ஏறிய அம்மேதைகள். நல்ல காரணங்களைக் காட்டிக் கம்பராமாயண எதிர்ப்பாளர்களை கடிந்துரைத்தனரா என்றால், இல்லை. அல்லது கம்பராமாயண எதிர்ப்பாளர்கள் கூறும் காரணங்களுக்குத் தக்க மறுப்பு கூறி வசை மொழி பகர்ந்தார்களா என்றால் அதுவும் இல்லை. காரணங் காட்டி வாதத்தை நிலைநாட்டும் பழக்கத்தை அந்த ‘மேதாவி’களிடம் நாம்தான் எப்படி எதிர்பார்க்க முடியும். தாம் கூறும் எதற்கும் விளம்பரம் தர ஏடுகள் இருக்கும்போது காரண காரியங்களைக் கவனிக்க வேண்டிய அவசியம் அவர்களுக்குத்தான் எப்படித் தோன்றும்!

“கம்பனைக் கொளுத்துவோம் என்றும் சிலர் துணிந்துவிட்டனர். இதனினும் மடைமை இருக்கவே முடியாது.” இவ்வளவுதான் ‘கலியுக ஜனகர்’ ஓமாந்தூர் இராமசாமி அளித்த தீர்ப்பு. கம்பராமாயணத்தை ஏன் கொளுத்துகிறோம் என்று நாம் கூறிய காரணங்களை ஆராய்ந்தாரா? அல்லது ஆராய எண்ணமாவது கொண்டாரா? இரண்டும் இல்லை! இரண்டும் அற்ற நிலையில் எதிர்ப்பாளர்களுக்கு மடைமைப் பட்டம் சூட்டியுள்ளார். மடைமைப் பட்டம் சூட்டவேண்டியதுதான்! சூட்டவேண்டியது யாருக்கு என்பதிலேதான் அவருக்குத் தடுமாற்றம் ஏற்பட்டுவிட்டது. போதை அந்த அளவுக்கு முற்றிவிட்டது. அவ்வளவேதான் காரணம். மராமத்து பக்தவத்ஸலமும், மீனாட்சிசுந்தரமும், ஓமாந்தூரார் பாடிய பல்லவியையே சற்று அழுத்தமான சாரீரத்தில் பாடியுள்ளார்கள். அதற்குப் பக்கமேளம் தட்டியுள்ளார்கள் வேறு வழியற்ற சிலர்.

கம்பராமாயணம் நிலைபெறுவதற்கு அவர்கள் கூறும் அவசியம் பற்றி ஆராயுமுன் ராமாயணத்தின் மீது வெறுப்பு காட்டும் நாம் கூறும் காரணங்களைச் சிந்திக்க வேண்டும்.

ராமாயணம் தெய்வகாதை என்று சொல்லப்படுவதால் குருட்டுப் பக்தி மக்களிடம் வளர்வதற்குக் காரணமாக இருக்கிறது.

ராமாயணம் படிப்பது அல்லது பக்கம் நின்று கேட்பது மோக்ஷலோகத்திற்குரிய வழி என்ற எண்ணம் புகுத்தப்படுவதால், அதிலுள்ள கதாபாத்திரங்கள் சிலைகளாக வடித்தெடுக்கப்பட்டுக் கோவில் கட்டவும், விழா நடத்தவும், காலத்தையும் பொருளையும் வீணாக்கவும் இடமேற்படுகிறது.

ராமாயணம் நம்பிக்கைக்குரிய நடந்த கதையாகச் சொல்லப்படுவதால் பகுத்தறிவு வளர்ச்சியைத் தடைப்படுத்த அது காரணமாக இருந்து வருகிறது.

வடமொழி ஆரிய கலாச்சாரத்தைப் பரப்ப எழுந்த நூலாதலால், தென் தமிழ் நல்ல கலாச்சாரத்தை கெடுக்கக் காரணமாக இருந்து வருகிறது.

கடவுள் காதை என்ற பெயரைத் தாங்கி காமரஸத்தையும், பொருந்தா ஒழுக்கங்களையும் பொழியும் மதுக்கிண்ணமாக இருந்து வருகிறது.

தனிப்பட்ட உயர்ந்த சாதியார் என்று தம் நிலையை உயர்த்திக் கொண்டு வாழ்வோர் தம் நிலையை என்றென்றும் உயர்த்திவைத்துக் கொள்ள ஒரு காரணமாக இருந்து வருகிறது.

அதற்குக் கொடுக்கப்படும் சிறப்பெல்லாம் கதைக்காகத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. உவமையழகு, அணியழகு ஆகிய காரணம் பற்றி என்றால் சிலப்பதிகாரத்திற்கும், சீவக சிந்தாமணிக்கும் இதைவிடப் பெருமையும், இதற்கு இருப்பதைவிடப்பல பஜனைக் கூடங்களும் இருந்திருக்க வேண்டும். ஆகவே கதைக்காகத்தான் கம்பராமாயணம் போற்றப்படுகிறது. அது கூடாது என்பது.

இத்தகைய காரணங் காட்டிச் சமுதாயத்தின் நலிவிற்கு ராமாயணம் போன்ற புராண இதிகாசங்கள் ஏதுக்களாக இருப்பதால், அவைகளிடத்து மக்களுக்கு இருக்கும் குருட்டுப் பக்திபோகவேண்டும் என்பதற்காகவே அவற்றின்மீது வெறுப்புணர்ச்சியைக் காட்டச் சொல்லுகிறோம். இராமாயணம் — குறிப்பாகத் தமிழ் நாட்டில் கம்ப இராமாயணம் முட்டாள்தனத்திற்கு, குருட்டு நம்பிக்கைக்கு, மூடப்பழக்கவழக்கத்திற்கு, இழிந்த ஆரிய கலாச்சாரத்தின் மேம்பாட்டிற்கு, கடவுளின் பேரால் காமரஸத்தைப் பொழிவதற்கு, பஜனைக்கூடம் அமைப்பதற்கு, கும்பிடு தண்டம் போடுவதற்கு, ஏமாற்றி வாழ்வதற்கு ஏதுவாக இருந்துவரும் புராணங்களுக்குஎடுத்துக்காட்டாக இருக்கிறது. ஆகவே கம்பஇராமாயணத்தின்மீது காட்டும் வெறுப்பு அதனோடு ஒத்த அனைத்துப்புராண இதிகாசங்களுக்கும் காட்டும் வெறுப்பின் அறிகுறியாகும். நமது வெறுப்பு கம்பனின் கல்வி மேம்பாடுபற்றியல்ல, அவர் காட்டும் உவமையழகு அணியழகுக்கு அல்ல. மாறாக அவற்றையெல்லாம் போற்ற—பாராட்டி மகிழ—சுவைத்து சுவைத்து இன்பம்பருக

(2-ம் பக்கம் பார்க்க)

## கம்பர் மாநாடு

2-ம் பக்கத் தொடர்ச்சி

இவைகள் பாலகாண்டத்தில் மட்டும் செய்த ரிப்பேர். இதைப் போன்றே ஒவ்வொரு காண்டமும் ரிப்பேர் செய்யப்பட்டு 'இமிடேஷன்' கம்பரால் ராமாயணப் பதிப்பு ஒன்றும் வெளியிடப் பட்டிருக்கிறது. அதனுடைய பிரதியும் கம்பர் கண்காட்சியில் வைத்திருந்திருப்பார்கள்; வைத்திருந்திருக்கத்தானே வேண்டும். ரஸிகமணி டி. கே. சி-யை 'கண்கண்ட கம்பர்' என்றும் 'இமிடேஷன் கம்பர்' என்றும் ஏதோ கேலிக்காகக் கூறுகிறோம் என்று எண்ண வேண்டாம். அவரே அவர் பதிப்பின் முன்னுரையில் கூறும் சொற்றொடர்களைப் பார்மின்; பார்த்துப் பகர்மின், "இது ஏதோ கம்ப ராமாயணத்தின் தொகுப்பு என யாரும் எண்ணிவிட வேண்டாம். கம்பர் பாடிய மொத்தக் கவிகளே இவ்வளவுதான்" என்று அறுதியிட்டுக் கூறுகிறார் கம்பரின் 'மறு அவதாரம்' என்று தன்னை எண்ணிக்கொண்டு. மேலும் சற்று உறுதியோடு கூறுகிறார் கவனியுங்கள், "அவைகள் கம்பரால் பாடப்பட்டவைகளல்ல, சம்பந்தமில்லாத செருகு கவிகள் அவைகள். அவைகளை எல்லாம் நான் எடுத்துவிட்டேன்" என்று உரிமையோடு கூறியிருக்கிறார். இதைக் கம்பராமயணப் பாதுகாவலர்கள் கண்ணிருந்தும் காணாததன் காரணமென்ன? வாய் இருந்தும் வெளியே சொல்லாததன் மர்மம் என்ன? ஏன் இவற்றையெல்லாம் கவனிக்க மறுக்கின்றனர் காவியக் காதலர்கள்? போதை அந்த அளவுக்கு ஏறியிருக்கிறதா? அல்லது மடைமை அந்த அளவுக்குக் குடிகொண்டுள்ளதா? நேர்மை தீர்ப்பளிக்கட்டும்!

இருபதாம் நூற்றாண்டுக் கம்பரின் கூற்றுப்படி பார்த்தால் செருகுகவிப் புலவர்கள் பலர் இந்த இரண்டு கம்பர்களுக்கும் இடையேயுள்ள காலங்களில் தோன்றியிருக்க வேண்டும். பாலகாண்டத்தில் மட்டும் ரஸிகமணியால் பல படலங்களே பிய்த்து எறியப்பட்டுள்ளன. அவருடைய 'ரிப்பேருக்கு' ஆட்பட்டவை வெறும் பாடல்கள் மட்டுமல்ல; படலங்கள் பலவும் அகப்பட்டுக் கொண்டு விழிக்கின்றன. பாலகாண்டத்தில் மட்டும் நறுக்கித் தள்ளப்பட்ட படலங்களைக் கம்பராமாயணக் காவலர்களுக்கு வைக்கிறோம் கவனிக்கட்டும்.

நீர் விளையாட்டுப் படலம்
எதிர் கோட் படலம்
வரைகாட்சிப் படலம்
பூக்கோய் படலம்
உலாவியற் படலம்
கோலங்காண் படலம்
அகலிகைப் படலம்
திருஅவதாரப் படலம்
நாட்டுப் படலம்
ஆற்றுப் படலம்

இந்தப்படலங்களையெல்லாம் உருவழித்துச், சிதைத்து, வெட்டி, வேலை செய்து ராமாயணத்தை செப்பனிட்டுள்ளார். 'ஒரிஜினல்' கம்பரால் செய்யப்பட்டவை என்று 'இமிடேஷன்' கம்பரால் ஒப்புக்கொண்ட செய்யுட்களின் வகையைப் பாருங்கள்

வரைகாட்சிப் படலம்
மொத்தப் பாடல்கள் 77
ஒப்புக்கொள்ளப்பட்டவை 1
உலாவியற் படலம்
மொத்தப் பாடல்கள் 54
ஒப்புக்கொள்ளப் பட்டவை 10
கோலங்காண் படலம்
மொத்தப்பாடல்கள் 43
ஒப்புக்கொள்ளப் பட்டவை 10
எழுச்சிப் படலம்
மொத்தப் பாடல்கள் 82
ஒப்புக்கொள்ளப்பட்டவை 10

இந்த ஒப்புக்கொள்ளப்பட்ட 31 செய்யுட்களுக்கும் ஒரே பெயரை அதாவது எழுச்சிப் படலம் என்ற பெயரை வைத்தார். மற்ற மூன்று படலங்களின் பெயர்கள் 'கண் கண்ட கம்பரின்' கருத்துப்படிசெருகல்கள்!

பரசுராமப் படலம்
மொத்தப் பாடல்கள் 50
கடிமணப் படலம்
மொத்தப் பாடல்கள் 104

பரசுராமப் படலத்தில், 5 பாடல்களை எடுத்தார், கடிமணப்படலத்தில் 6 பாடல்களை எடுத்தார்; இரண்டையும் ஒன்றாக்கி 11 பாடல்கள் அடங்கிய படலமாக்கி அதற்குக் கடிமணப் படலம் என்ற பெயரிட்டார் புதுமெருகு கம்பர். என்னே அழகு!

| | |
|---|---|
| திருஅவதாரப் படலம் | 138-ல் 1 |
| கையடைப் படலம் | 24-ல் 16 |
| மிதிலைக்காட்சிப்படலம் | 157ல் 19 |
| குலமுறை கிளத்தும் படலம்- | 29-ல் 7 |
| ஆற்றுப் படலம் | 20-ல் 1 |
| நாட்டுப் படலம் | 61-ல் 7 |
| கார்முகப் படலம் | 12-ல் 4 |
| தாடகைவதைப் படலம் | 77-ல் 22 |
| வேள்விப் படலம் | 59-ல் 16 |
| சிறப்புப் பாயிரம் | 11-ல் 5 |

இந்த முறையில் தான் டி. கே. சி. யின் தராசு பாடல்களைப் பொறுக்கி எடுத்திருக்கிறது.

தராசில் நிற்கத்தாளாமல் கீழே சரிந்து விழுந்து விட்ட பாடல்களுக்குச் சில 'சாம்பிள்' தருகிறோம்.

| | | |
|---|---|---|
| அகலிகைப்படலம் | 86 | பாடல்கள் |
| பூக்கொய் படலம் | 39 | ,, |
| நீர்விளையாட்டுப் படலம் | 33 | ,, |
| உண்டாட்டுப் படலம் | 67 | ,, |
| எதிர்கோட் படலம் | 34 | ,, |

இவற்றை முன்பு பாடியதாகவே 'இமிடேஷன்' கம்பருக்குப் புலப்படவில்லை. அப்படியே முழுக்க முழுக்க செருகுப் படலங்கள்!

பாடல்களைத் திருத்திக் காண்பித்திருக்கும் அழகுக்கும் ஒரு உதாரணம் வேண்டாமா? தருகிறோம் 'இமிடேஷன்' கம்பரின் திறமையைத் தெரிந்து கொள்ளுங்கள். பரசுராமப்படலத்திலுள்ள ஒருபாடலின் ஒரு அடி "தானுவதோர் வகையே நனிசனகன் றருதயலும்" அதை "கோனாகிய மணவாளனும் சனகன் தருகுயிலும்" என்று திருத்தியுள்ளார். அகலிகைப் படலம் பரசுராமப்படலம் இவைகளை அப்படியே தூக்கி எறிந்துவிட்டதோடு நில்லாமல் அவற்றிற்கான கதைகளை உரைநடையாக எழுதிவைத்திருக்கிறார்.

இந்த வெட்டு, ஒட்டுவேலைகளை டி. கே. சி. செய்வதற்குக் காரணம் உண்மையைக் கண்டுபிடித்து விட்டார் என்பதோ, அல்லது சீர்திருத்தஞ் செய்ய முற்படுகிறார் என்பதோ அல்ல. நாம் கம்பரை நிறுத்திவைத்திருக்கும் குற்றக் கூண்டிலிருந்து மக்களுக்குத்தெரியாமல் கீழே இறக்கிவிட முயலும் தந்திரமுயற்சியே அவருடையநோக்கம். அழுகிய பழத்தில் அழுகிய பாகத்தை மட்டும் நறுக்கி எடுத்துவிட்டு நல்ல பழம் போல் நாலுபேருக்கு நடுவில் வைக்கும் பழக்கடைக்காரன் போலவும், முகத்தில் வடுக்கள் பரந்து அழகு குறைந்து போக மேற்பூச்சுப் பூசி ஆடவர் நடுவே உலாவிவர விரும்பும் அணங்கு போலவும் கம்ப

ராமாயணத்தைச் செப்பனிட முனைந்திருக்கிறார் சிதம்பரநாதனார். செப்பனிடுவது தவறு என்று நாம் கூறவில்லை; செப்பனிட அவர் கையாண்டுள்ள முறை நேர் வழியற்ற தந்திர முறை என்பது மட்டுமல்ல, பிறரை ஏமாற்றிவரும் முறையுமாகும். செய்கையிலே சுத்த மில்லை, சிந்தனையிலே களங்கமிருக் கிறது என்று கூறுகிறோம்.

கம்ப இராமாயணம் இப்படித் தான் இருந்திருக்கவேண்டும் என்று யூகிக்க அவருக்கு உரிமையில்லையா என்று அன்பர்கள் கேட்க முற்படு வார்களானால், கம்பன் இன்னின்ன காரணங்களுக்காகத்தான் பாடி யிருந்திருக்க முடியும் என்று நாங் கள் யூகிக்க இடமில்லையா என்று கேட்கிறோம். அவருடைய யூகத் திற்குக் காரணமிருக்கிறதென்றால், எங்களுடைய யூகத்திற்கும் தக்க காரணங்களிருக்கின்றன. அவர்கொள் ளும் அதே உரிமையைத் தான் நாங் களும் கொண்டிருக்கிறோம். அவர் உரிமைக்கு இடந்தருவோர் ஏன் எங் கள் உரிமைக்கு இடந்தர மறுக்கிறார் கள்? ஒரு வழி நியாயம் ஏன் பேசு கிறார்கள்?

இப்படிப்பட்ட 'இமிடேஷன்' கம் பரின் தலைமையில் தான் கம்பர் மாநாடு நடந்தேறியது. இந்த மரா மத்துக் கம்பரின் வேலையைத் தோழர் ரா. முருகேசக் கவிராயர் போன்ற ஒருசில புலவர்கள் கண்டித்திருக்கின் றனரே யொழிய, இராமயண ரஸி கக் காதலர்கள் கண்டிக்க முன் வர வில்லை. ஏன்? இந்தச் சிகாமணிகள் தாம் கலைப்புரட்சிக்காரர்கள் மீது பாய்வதாக வெற்றுச் சல்லடங்கட்டி, வீண் ஜம்பம் பேசி, இறுதியாக மண்டியிடும் கட்டத்திற்கு வந்து சேருகிறார்கள்.

கம்பன் ஏன் கம்பஇராமாயணம் பாடினான் தெரியுமா? இலட்சியப் பேருலகையும், இலட்சிய வாழ்வை யும் காணவே எழுதினான். இது ஓமாந்தூரார் கூற்று. தமி ழன் காணாத இன்பங்களைக் கம்பன் கண்டு பாடினான். இது தெ. பொ. மீ. பாடிய பல்லவி. கலை-கடவுள்— காவியத்தை ஒன்றாக்கிக் காட்டவே கம்பன் இராமாயணம் செய்தான். இது பக்தவத்ஸலத்தின் முடிவு. மனிதனின் அன்றாட வாழ்க்கைக் குக் கம்பராமாயணத்தை ஒரு வழி காட்டியாக ஆக்கினான் கம்பன். இது கேதாரீஸ்வர சர்மாவின் உரை. பெண்களின் கடமைகள் பற்றித் தெரிவிக்கவே கம்பன் பாடுபட் டான். இது இராஜரத்தினம் அம்மை யாரின் பாராட்டு. இம்மாதிரி ஆளுக் கொரு விதமாக தாங்கள் எதை எதை நாட்டில் இருக்கவேண்டு மென்று எண்ணினார்களோ அவை கம்பராமாயணத்தில் இருப்பதாகவே உரைத்தனர். அந்த அளவுக்குப் போதை அவர்கள் உள்ளத்தில் ஏறி யிருப்பதாக முன்னரே குறிப்பிட் டோம். இவர்கள் கூறுகிற எந்த இலட்சியத்திற்காகவும் கம்பர் இரா மாயணம் இயற்றவில்லை என்பது அவர் கூறும் கூற்றிலிருந்தே நன்கு அறியக் கிடக்கின்றது. "ஆசை பற்றி அறையலுற்றேன் மற்றிக் காசில் கொற்றத்து இராமன் கதை யரோ" என்று கம்பர் கூறுகிறார். கதைக்காக இராமாயணம் பாடி னாரேயன்றிக், காவியஇலட்சியத்திற் காக அல்ல என்பதை இனியேனும் அவர் அடிப்பொடியாழ்வார்கள் உணரட்டும். கடவுட் காதை ஆசை பற்றி எழுத முற்பட்டுச் சில நல்ல கருத்துக்களோடு, ஆரியத்திற்கு அடி மைப்படுத்தும் பல ஆபாசக் கருத் துக்களையும், தன் உள்ளத்தில் ஊறி எழுந்த காம மதுவினையும் தெவிட் டும் அளவுக்குத் தன் காவியத்தில் பொழிந்துள்ளார். நம் கூறுவதைக் கண்டு சினங் கொள்வோர், சீறிப் பயனில்லை; 'கம்பரஸ டோஸ்களில்' சில துளிகளை அருந்திப் பார்த்து விட்டுப் பதில் கூறட்டும்.

ரஸிகமணிகள் உண்டதுபோக வழிந்து ஓடும்படி விடப்பட்ட 'கம்ப ரஸத்தின்' சிறிதளவே வட்டிலில் ஏந்தி நாட்டிற்குத் தரப்பட்டது. ரஸத்தின் தன்மையை நாடு அறிந்து விட்டதே இனித் தம்மை நாடு ஏள னம் செய்யுமே என்று 'கம்ப மது' அருந்திகள் மனங் கலங்குகின்றனர். கலைப் புரட்சி வீரர்கள் எடுத்துக் காட்டிவரும் 'கம்பரஸ வட்டிலை'க் கவிழ்த்துவிட அவர்கள் எண்ணு கிறார்கள். மற்றொரு வட்டிலும் தயா ரிக்கப்படுகிறது. பொறுத்திருங்கள் சுவைத்துப் பார்க்கலாம். அடுத்த ஆண்டு 'கம்பர் கூத்துக்கு' அந்த வட்டிலை அனுப்பிவைக்கிறோம், சுவைத்துப் பயன்பெறும்பொருட்டு.

7-ம் பக்கத் தொடர்ச்சி

பெரும்பாலானவர்கள் விஷயங்களில் இதுவே பொதுவிதியாகும். சீனாவை ஆண்ட மஞ்சு பரம்பரையின் வர லாறும் இதுதான். சீனாவின் பிதா என்று பெருமையாகப் பேசப்படும் சன்யாட்சன் மஞ்சுக்களின் ஆட் சியை வீழ்த்தினார். பெயருக்குக் குடியாட்சி அமைக்கப்பட்டது. ஆளுவோர் போக்கிலும், மக்கள் மனவளத்திலும் புரட்சிகரமான மாறுதல் எதுவும் ஏற்படுத்தப்பட வில்லை. மக்களுக்கு நலம் பயக்கும் பண்பையே இழந்துவிட்ட, பிறநாட் டவரின் பொருளாதாரச் சுரண்ட லுக்குச் சாதகமாக அமைந்திருந்த, பல தான்தோன்றிகளை உண்டாக்கி போர்த் தலைவர்களாக ஆக்கும் தன்மை மட்டும் கொண்டிருந்த— பெரும்பாலானவர்கள் வேலையற்று இராணுவத்தில் சேர்ந்து மற்றவர் களைச் சூறையாட மட்டும் வாய்ப் பளித்து வந்த—நாட்டின் விடுத லைக்கு வேண்டப்படும் ஒற்றுமை யையும் உரிமை உணர்வையும் ஊட் டும் சக்தி இழந்து கிடந்த—பழைய சமுதாய அமைப்பைப், பெருமைப் படுத்திப் பேசுவதிலும், பாதுகாத்து வளர்ப்பதிலுமே சன்யாட்சனின் அறிவும் ஆற்றலும் இருந்து விட்டது. எனவே, மஞ்சு அரச பரம்பரையினரின் ஆட்சி ஒழிக்கப் பட்ட பின்னரும், நிலையான குடி யாட்சி நிலை பெறாததோடு, மக்க ளுக்கு உருவான பலனும், முற் போக்கான எண்ணமும் ஏற்படாமல் போய்விட்டது.

சீனநாட்டு மக்களின் நல்வாழ் விற்கு எவை எவை முட்டுக்கட்டை களாக இருந்தனவோ, அவைகள் அங்கு நிலைத்து இருப்பதற்கு எது அடிப்படைக் காரணமாக இருந் ததோ, அதனை ஆராய்ந்து அறிந்து, அழித்து எறிந்து, மக்களுக்குத் தேவைப்படும் நலம்பல தேடித்தரும் நல்லாட்சி முறையை மேற்கொள்ள, குடியாட்சி அமைத்த சன்யாட்சன் உள்ளிட்ட எவருக்குமே எண்ணம் ஏற்படவில்லை — விருப்பமுமில்லை. அதற்குப் பதிலாக, பழைய நிலையே நீடித்து இருப்பதற்கு, அதனை நீடிக் கச் செய்வதற்கு, பலம் பொருந்திய ஒரு மத்திய சர்க்காரை அமைக்க, நாட்டுப்பற்றும் மக்கள் நலமும் துளியும் இல்லாத போர்த் தலைவர் களின் ஒத்துழைப்பையே பெரிதும் நாடினார்கள் சென்னும், அவரைச் சார்ந்தவர்களும். (தொடரும்)

# சீனு சிவப்பாகிறது!

—✲—

"அமெரிக்காவின் உதவியில் மேலும்பத்துமடங்குக்கூடுதலானு லும், எப்படியாவது உள்நாட்டுப் பலத்தைப்பெருக்கிக்கொண்டு, அதற்குத் தகுதி வாய்ந்த தலைவரைத்தேர்ந்தெடுத்துக் கொண்டாலன்றி, சீனுவைக் காப்பாற்றுவது முடியாத காரியமாகும்!"

நியூயார்க் ஹெறால்ட் டிரிபியூன்.

"கோமிண்டாங் அமைப்பில் ஏதாவது திடுக்கிடக்கூடிய மாற்றங்கள் ஏற்பட்டாலன்றி, சியாங் கேய்ஷேக் சகாக்களின் ஆட்சி காலம் முடிவை நெருங்கிவிட்டது என்றே குறித்துவிடலாம்.

நீண்ட காலமாகவே, அந்தக் கும்பல் தோல்வியை வரவேற்றுக் கொண்டிருந்தது. தமது போக்கிற்கு, ஒழுக்கமற்ற முறைகளைக் கருவியாகக் கொண்டு, எதேச்சாதிகாரத்தைக் கையாண்டு வந்தது. மக்களாட்சி பண்புடைய உண்மையான சீனத்தலைவர்களை அணுகி, ஆட்சியைப்பலம்பொருந்தியதாக ஏற்படுத்திக் கொள்வதில் எந்தவித முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை.

அரசியல் சீர்திருத்தத்தை நிபந்தனையாகக்கொண்டு அமெரிக்கா உதவி செய்திருக்கவேண்டும். ஆனால், இதற்குப் பதிலாக, கோமிண்டாங்கின் பேராசை (அமெரிக்கா) உதவி எனும் அடியற்ற பள்ளத்தில் கொட்டப்பட்டது."

நியூஸ்கிராணிகல்.

மேலே எடுத்துக்காட்டியுள்ளபடி சீன சர்வாதிகாரி சியாங் கேய்ஷேக்கைக் குறித்து, மஞ்சூரியாவில் சீன சர்க்கார் துருப்புக்களுக்கு ஏற்பட்ட தோல்வியைக் கண்டு, முறையே அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் உள்ள பத்திரிகைகள் எழுதுகின்றன.

சியாங் கேய்ஷேக்கை அதிகார பீடத்திலிருந்து ஒழித்துக்கட்டிவிட வேண்டுமென்று, அதிகாரத்தில் அமர்ந்துள்ள கூட்டுத் தோழர்களே தீர்மானித்திருப்பதாக அமெரிக்காவிற்கு நம்பிக்கையான செய்தி கிடைத்திருக்கிறதாம். அமெரிக்க இராணுவ அதிகாரிகளும், அதிகாரத்திலுள்ள நுண்ணறிவாளர்களும், சீனுவில் இத்தகைய மாறுதல் ஏற்படுவதை வரவேற்கிறார்களாம். ஆனால், வெளிப்படையாகத்தான் இதனைச் சொல்வதில்லையாம். சீன அரசாங்கத்தையும்திருத்தியமைப்பதற்கு சியாங் கேய் ஷேக் ஒருபெரிய தடையாக இருக்கிறார் என்று அவர்கள் முன்பேதெரிந்திருந்தனராம். அதுவுமன்றி சியாங் கேய் ஷேக் இராணுவத் தளபதியாக இருப்பதற்கு முழுதும் தகுதியற்றவரென்றும், அவருடைய தோழர்கள் விஷயத்தைக் குழப்புகிறவர்கள்—ஒழுக்கமற்றவர்கள்—விரிவிலா நெஞ்சினர்கள் என்றும் தீர்மானத்தோடு இருந்தார்களாம் அமெரிக்க அறிஞர்கள். இது வசையுமல்ல; பழிச்சொல்லும் அல்ல. சியாங் கேய் ஷேக்—மற்றும் அவரைச் சார்ந்தவர்களுடைய உண்மைப்படப்பிடிப்பாகும் இது

மேல்நாடு என்றும் காணுத அளவிற்கு, ஆத்மார்த்த அறிவு கீழ்நாட்டில் கொழுந்துவிட்டு எரிந்ததாகச் சிறப்பித்துச்சொல்லப்படுவதையும், இதனை மேற்கொள்வது தான் மேல் நாடுகள் எதிர்காலத்தில் நன்கு வாழ்வதற்கான உயர்ந்த மார்க்கம் என்றும் இன்றியமையாத காலத்திலும் பெருமையாகப்பேசிக்கொள்ளுகிறவர்கள், சீனுவின் பழம் வரலாற்றைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நல்ல பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு சீன சமுதாயம் அமைக்கப் பட்டிருந்தால், நீண்ட காலமாகவே அந்த நாட்டின் வரலாறு, மற்றவர்கள் எள்ளிநகையாடுவதற்குரிய ஒரு கேலிச் சித்திரமாக இருக்குமா? நாட்டின் பல பகுதிகளிலும் சிறு சிறு காட்டு ராஜாக்கள் தோன்றி, மக்கள் நலனைக் கருதாமல், தங்கள் கோலாகல வாழ்விற்கே வழி செய்துகொண்டு, மக்களைப் பலவகையிலும் கொடுமைப் படுத்தி, வறுமையிலும் மடைமையிலும் மக்களை ஆழ்த்தி, மண்டலங்களை ஆண்ட—ஆளும்மாமிச பிண்டங்கள்மாநிலத்தில் வேறு எங்காவது உண்டா? உலக சுகபோகத்திலே கருத்தைச் செலுத்தி, பேராசைக்கு உள்ளத்தைப் பறிகொடுத்து, சொந்த வாழ்விற்கு எத்தகைய இழிந்த முறைகளையும் மேற்கொள்ளலாம் என்னும் சூது மதி கொண்டு, மக்களுக்காக மன்னனேயன்றி மன்னனுக்காக மக்கள் இல்லை என்னும் நன்னெறியைத் துச்சமெனத் தள்ளி, உலகாயத வாழ்வு நடாத்தும் மேல் நாடுகளிலே, ஆட்சிப்பீடத்திலுள்ள பதுமைகளின் போக்கு அவ்வாறு இருக்குமானுல், அது ஆச்சரியப்படக் கூடியதன்று. மன்னிக்கவிடக் கூடியதுமாகும். நமது முன்னேர்கள் விண்ட மோன நிலையைத் தெரிந்து, தெரிந்த வழி தெளிவு பெற்று, வாழ்க்கையை அதன்வழி செலுத்தி, மக்களுக்கு 'இகபர' சுகந் தரும் இந்தச் சூட்சமத்தை, மேல்நாடுகள் நமது முன்னுல் மண்டியிட்டு கற்றுக் கொள்ள வேண்டுமென்று கதை சொல்லுகிறார்களே நமது கற்றவர்கள், அவர்களைக் கேட்கிறோம், கீழ் நாடுகளில் ஒன்றுன சீனத்திலே, மேல்நாடுகள் மறந்துபோன மக்களுக்காகாத மாபாதகத்தை மக்களாட்சி பெயர் கூறி, ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்போர் மனமொப்பிச் செய்து வருகிறார்களே இன்றும், அது ஏன் என்று?

சீனு, என்றுமே, நாம் இன்று அறிந்திருக்கிற வளர்ந்துவரும் அரசியல் தத்துவப்படி, மக்களாட்சி முறையையோ, நல்லாட்சி அமைப்பையோ பெற்றிருந்ததில்லை. நாடு முழுதும் பல சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு தளபதியும், அவனுக்கென ஒரு சிறு இராணுவமும் இருந்து வந்தது. இந்தத் தலைவர்கள் ஒருவரோடு ஒருவர் அடித்துக் கொள்வதும், இராணுவச் செலவிற்காக மக்களைக் கொள்ளையடிப்பதும், சிறந்த ஆட்சி முறையாகக் கொண்டிருந்தனர். இந்தப் போர்த் தலைவர்களில் சிலர் சில சமயங்களில் ஜப்பான் ஏகாதிபத்தியத்தை ஆதரித்தும், இன்னும் சில சந்தர்ப்பத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவு காட்டியும், ஆங்கில ஏகாதிபத்தியத்திற்குத் துணை நின்றும், தங்கள் சொந்த லாபத்தைப் பெருக்கிக்கொண்டனர். எல்லாச்சந்தர்ப்பங்களிலும் இவர்களால் துவக்கப்படும் உள்நாட்டுப் போர் வெற்றி பெறுவதும் தோல்வியுறுவதும் இந்த மூன்று ஏகாதிபத்தியங்களும் காட்டும் ஆதரவைப் பொறுத்திருந்தது.

(6-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி] 14—11—48 [ஞாயிறு


## புதிய ஏகாதிபத்யம்

நெற்றியிலே திருநீறு! கழுத்திலே உருத்திராட்ச மாலை! கட்கத்தில், எதையோ பட்டுத்துணியால் போர்த்து, வைத்திருக்கிறார்! சிவக்கோலத்துடன் விளங்கும் அவரை மன்னர், அன்புடனும், பக்தியுடனும் வரவேற்கிறார். கட்கத்தில், ஏதோ சிவாகம ஏடு இருக்கிறது; அடியார், நமக்கு அதனைக்காட்டி, நாதனின் நற்பாதத்துக்கு வழி காட்டப் போகிறார். நமக்கு இஃதோர் நன்னாள்! நல்லாசான், நம்மைத்தேடி வந்துள்ளார், என்று எண்ணிய மன்னன், வருக! வருக! சிவக்கோலப் பெரியீரே வருக! என்னை வாழ்விக்க வந்துள்ள பெம்மானே வருக!—என்று கூறி வரவேற்கிறார்-வந்தவர் குறுநகை புரிகிறார்—வணங்கியவர், அது அவருடைய அருள் நெறியின் விளக்கம், என்று எண்ணுகிறார்; வந்தவர், கட்கத்திலிருந்த, மூட்டையை அவிழ்க்கிறார்-கூரிய வாள், மின்னுகிறது—மன்னனின் மார்பில் பாய்கிறது—அவர் சாய்கிறார்-சதிக்காரன் களிக்கிறான்—வேடம் பலித்தது-வெற்றி கிடைத்தது, வீரவேந்தனைக் களத்திலே வீழ்த்துவது முடியாத காரியமாக இருந்தது—இதோ முடித்துவிட்டேன் காரியத்தை, மன்னனின் கருத்தை மயக்க ஒரு சிறு கபட நாடகமாடிக் காரியத்தைச் சாதித்துவிட்டேன் என்று களிக்கிறான்.

இருமன்னர்கள், போரிட்டனர்—அதிலொருவர் போரில் புலி—மற்றவன் குணத்தால்நரி. புலியெனப் போரிடும் மன்னன், சிவனடியார்களைக் கண்டால், போதும், அவர்களின் சென்னியைச் சிரமீது கொள்ளவும் தயங்காக் குணமுடையவன். இதுதெரிந்த முத்தநாதன் என்ற நரிக் குணத்தான், நன்றாகக் குழைத்து நீறு பூசிக்கொண்டான், உருத்திராட்சத் தாவடங்கள் அணிந்துகொண்டான், கூரிய கட்கத்தைப் பட்டுத் துண்டு கொண்டு மறைத்தெடுத்துக் கொண்டான், வீரவேந்தனைத் தனியாகக் கண்டு சிலபேச அனுமதி கோரினான்; வேடத்தைக் கண்ட வேந்தன் ஏமாந்தான் — மெய்ப்பொருள் உணர்த்த வந்தேன் என்றான் வேடதாரி — தன்யனானேன் என்றான் சூதறியா மன்னன் — உயிரை இழந்தான்.

மெய்ப்பொருள் நாயனார் கதை, என்று கூறுவர், இதனைப் பெரிய புராணத்தில்—வேடத்தைக் கண்டு ஏமாறலாகாது என்ற அறிவுரைக்குப் பயன்படுத்துவதுமில்லை, இதனை—சிவபக்தியின் மேன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டாகவே, பயன்படுத்துகின்றனர். கதைகளைப் பக்தர்கள், எங்ஙனம் பயன்படுத்துகிறார்கள் என்பதைக்கூற அல்ல, இதனை நாம் இங்கு தீட்டுவது. சைவத்தின் மீது அளவுகடந்த பற்றுக்கொண்டவரை 'சிவவேடம்' பூண்டு ஏய்த்து, மாய்த்த, அந்தப், பெரிய புராணத்தின் மறுபதிப்பென, இப்போது, நமது நாட்களிலே, அரசியல் துறையிலே நடைபெறும், உரிமைப் படுகொலைகளைப் பற்றிக் குறிப்பிடவே இதனைக் கூறினோம்.

நெற்றியிலே நீறு, எனவே நேர்மையிலே நாட்டமிருக்கவேண்டும்—கழுத்திலே சிவச்சின்னம், ஆகவே அதை அணிந்திருப்பவரின் உள்ளம் தூய்மையானதாக இருந்தே தீரவேண்டும் — கட்கத்திலே ஏதோ இருக்கிறது, சிவக்கோலத்தவரிடம், சிவாகம ஏடுதான் இருக்கும்—என்ற முடிவுக்கு, பக்தியின் காரணமாக வந்து உயிரை இழந்த மன்னன் போல, வேடத்தைக்கண்டு ஏமாந்து, உரிமையை இழந்துவிடும், பரிதாபத்துக்குரிய மக்கள் அரசியல் துறையிலே, அனேகர் உள்ளனர்.

மெய்ப்பொருள் உரைக்க வந்துள்ளார், என்று எண்ணி வேந்தன் உயிரிழந்தது போலவே அரசியலில், வேடத்தைக் கண்டு மயங்கி, அந்த வேடதாரிகள், நற்பொருள்தர வந்திருக்கிறார்கள் என்று நம்பிக்கை கொண்டு, பிறகு தமது உரிமையை நாசம் செய்துகொள்ளும், மக்கள், இதுபோது, ஏராளமாக உள்ளனர்.

யாருக்கும், ஏதேனும் ஓர் பொருளின் மீதோ, பற்று மிகுதியாக இருப்பின், அவர்களை, எத்தர்கள் ஏய்க்க எண்ணும்போது, எதன்மீது அவர்களுக்குப் பிரியம் அதிகமோ, அதே கோலம் பூண்டு வந்தே, ஏய்ப்பர்—ஏய்த்திருக்கின்றனர்—ஏய்த்து வருகின்றனர் — ஏமாளிகள் உள்ள வரையில் இத்தகைய எத்தர்கள் இருக்கத்தான் செய்வர். பற்று இருக்கத்தான் வேண்டும் ஏதேனும் ஓர் கொள்கையினிடம் — மரக்கட்டைகளாக இருத்தலல்ல மாந்தர்க்கழகு—ஆயினும், பற்று, நமக்குப் பகுத்தறிவையும் பாழாக்கும் மூடுபனியாகும் படியாக மாறிவிட, அனுமதிக்கலாகாது.

மெய்ப்பொருள் நாயனார் காதையிலே, மதப்பற்று அடிப்படையாக அமைந்திருக்கிறது. நாட்டுப்பற்று, மதப்பற்றுக்கு அடுத்த இடம் பெறுகிறது—மக்களில் பலப்பலர், இந்தத் துறையிலே, மெய்ப்பொருள் நாயனார்களாகி யுள்ளனர் — உரிமையை இழந்துள்ளனர் — இழந்து வருகின்றனர்.

நமது மக்களுக்குள்ள நாட்டுப் பற்று, எவ்வளவு ஆழ்ந்தது என்பதைக்கண்டு கொண்ட சிலபலர், தமது சிறுமைச் செயலை மறைக்க, சதிச்செயலை மறைக்க, சுயநலத்தை மறைக்க, நாட்டுப் பற்றுடைபோர் வேடமிட்டுக் கொள்கின்றனர்—வெள்ளை உள்ளத்தினரை வீழ்த்த—இதில் வெற்றியும் பெற்று வருகின்றனர். சிவவேடம்கண்டு, சித்தத்தை முதலிலும் உயிரைப்பிறகும் பறிகொடுத்த மன்னன் போல, மக்கள், நாட்டுப்பற்று வேடமிட்டுவரும் நயவஞ்சகர்களை, நல்லவர்களென்று நம்பி, தமது உயிரினும் மேலான உரிமையை, இழந்து விடுகின்றனர். வேடதாரிகள் வெற்றிப்புன்னகை புரிகின்றனர்.

நாட்டை மீட்டிடப் போரிட்டவர்களை நாம், நமது மாவீரர்களாக, தலைவர்களாக, வழிகாட்டிகளாகக் கொள்ளவேண்டும், அவர்களைப், போற்ற வேண்டும் அவர் காட்டும் வழிசென்று, அவரிடும் ஆணையை நிறைவேற்றி, அவருக்குப்பணி புரிந்து, இன்புறவேண்டும் என்று மக்கள், எண்ணுகின்றனர்—அது அவர்களின் பண்புக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு.

நாட்டுப்பற்றுக் காரணமாக இந்நிலை கொண்டமக்களை, எத்தர், வேடமிட்டு, வீழ்த்துவது காணும்போது உண்மையிலேயே வேதனையாகத்தான் இருக்கிறது. பாபம்! மக்கள் எவ்வளவு ஆழ்ந்தநம்பிக்கை, கொண்டு இருக்கிறார்கள்—அந்த நம்

பிக்கையை, நாசகாலர்கள் எவ்வளவு தீய செயலுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள், என்பதைக்காணும் போது, மிகமிக அதிகமான வேதனையாகத்தான் இருக்கிறது.

அதோ, டில்லியிலே கூடி, நாட்டுக்குப் புதிய ஆட்சிமுறைத்திட்டத்தை வகுக்கிறார்கள் — மெய்ப்பொருளைக் காட்டுகிறார்கள்—எவ்வளவு மக்கள், அங்கு கூடிடும் முன்னணியினரின் வேடத்தைக்கண்டு ஏமாந்து, தமது, உரிமையை இழந்து கொண்டிருக்கிறார்கள்! அங்கு நடைபெறுவதன், சூட்சமத்தை ஓரளவுக்கேனும் தெரிந்துகொள்ளக்கூடிய நிலையில் உள்ளவர்களே மிகச் சிறு தொகையினர் தான்! அவ்வளவு 'சமர்த்தாக'க் காரியம் நடைபெறுகிறது.

அதிகாரவெறியர்கள் — ஏகாதிபத்யப்பிரியர்கள் — முதலாளிமார்கள்—முப்புரியாளர்கள் — என்பன போன்றோர்களெல்லாம், அங்கு, "தேசிய வேடம்" புனைந்துகொண்டுள்ளனர்! அந்தக் கோலத்தைக் கண்டு, நாட்டுப்பற்றுக்கொண்டுள்ள நமது மக்கள், "தேசியத்தலைவர்கள் தீட்டிடும் திட்டம் தேசமகாஜனங்களுக்கு நன்மைதரும் திட்டமாக இருந்தேதீரும்" என்று எண்ணுகின்றனர் — நம்புகின்றனர் — வேடத்தைக்கண்டு ஏமாறுகின்றனர், அவர்களோ, அங்கு, ஒருபுதிய ஏகாதிபத்யத்தை அமைத்துக்கொண்டிருக்கிறார்கள்! கடகத்திலே கூரியவாள் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறதென்ற உண்மையை அறியாத ஊராள்வோன், மெய்ப்பொருள் தெரியவன்றோ ஆவல் கொண்டான்! அதுபோலவே, அங்கு, பாசீசத்துக்கான பாதை அமைக்கப்படுகிறது என்பதைக் கண்டறிய முடியாத மக்கள், ஜனநாயகசாசனம் அங்கு தயாரிக்கப் படுவதாக எண்ணி ஏமாறுகின்றனர்.

பல நாடுகளின் 'கதம்பம்' ஒரு கண்டம்; இந்தியாவை, எவரும் ஒரு துணைக்கண்டம் — சிறு அளவினதான கண்டம், என்றே கூறினர் —கூறுவர்— அதன் நிலப்பரப்பைக் கவனித்து மட்டுமல்ல, மக்களின் நிலை, வரலாற்று நிலை, ஆகியவற்றினையும் கவனித்து. அப்படிப்பட்ட துணைக்கண்டத்துக்கு, இப்போது, தயாரிக்கப்படும் ஆட்சி முறைத்திட்டம், என்ன? ஒரு புதிய ஏகாதிபத்யத்திட்டம் தயாரிக்கப்படுகிறது!!

கூட்டாட்சி என்று பெயர் நாட்டின் பலபகுதிகள் ஒன்றோடொன்று கூட்டாகி, அந்தக்கூட்டு விவகாரத்தைக் கவனிக்க, கூட்டுப்பொறுப்பை ஏற்க, ஒரு நடுஅலுவலகத்தை, மத்யசர்க்காரை அமைத்துக் கொள்ளும், பெடரல் முறை அங்கு, இது தீட்டப்படுவதாகக் கூறுகிறார்கள். ஆனால் திட்டத்தை அலசிப் பார்த்தால், இந்தத் துணைக் கண்டத்தின், பல்வேறு பகுதிகளிலும்,—மாகாணங்களிலும் —பலமற்ற, பயன்தரும் காரியமாற்றும் ஆற்றலும் வசதியுமற்ற ஆட்சி முறையும், இந்த மாகாணங்களை ஆட்டிவைக்கும் சூத்திரக் கயிறு, மத்ய சர்க்காரிடத்தில், தரப்பட்டிருப்பதும் விளங்கும்.

வெள்ளையர்மீது குறை கூறிய போது, மிக முக்யமாக வலியுறுத்தப்பட்ட விஷயம், மாகாணங்களுக்கு, போதுமான, மக்களாட்சிக்குத் தேவையான அளவுள்ள, பலமும் அதிகாரமும் தரப்படவில்லை, என்பது. மாகாண சுயாட்சி வேண்டும், என்ற. மூல முழக்கத்தை மக்கள் மறந்துவிட்டிருக்கமாட்டார்கள் என்று நம்புகிறோம். இப்போது, தயாரிக்கப்படும் ஆட்சித் திட்டத்தின்படி, இந்த மூல முழக்கம், அடிப்படைக் கோரிக்கை, மாகாண சுயாட்சி, வெறும் கேலிக்கூத்தாக்கப்படுகிறது — மாகாணங்களுக்குத் தரப்படும் அதிகாரத்தின் தன்மை, அளவு, நிதியின் அளவு, வகை, ஆகியவற்றைக் கவனிக்கும்போது, ஒரு பெரிய ஜில்லா போர்டு போன்ற நிலையே, மாகாணங்களுக்குத் தரப்பட்டிருப்பது விளங்கும்.

வெளிநாட்டுடன் தொடர்பு, உலகப் போக்குவரத்து, உலகில் மற்ற நாடுகளுடன் வியாபாரத் தொடர்பு, போன்ற, பெரிய, இந்தத் துணைக் கண்டத்தின் பாதுகாப்புக்கான, காரியங்களைக் கவனித்துக்கொள்ள மட்டுமே, ஒரு பலம் பொருந்திய அமைப்பு, வேண்டும்; அவ்வளவு பொறுப்பான காரியத்தை எந்த ஒரு தனிப்பட்ட மாகாணமும்தானாகவே செய்துகொள்ள முடியாது, எனவே, இதற்கோர் மத்திய சர்க்கார் வேண்டும், என்றுதான், பலரும், இதுநாள் வரைவாதாடிவந்தனர். இந்தத்துணைக் கண்டத்தை, ஒரே பேரரசுக்கு உட்படுத்த வேண்டும் என்றோ, இங்கு, தனிப் பண்புகளுடன் உள்ள, பல்வேறு பகுதிகளையும், உருக்கி ஒரே அச்சில் வார்த்து எடுக்க வேண்டுமென்றோ எவரும் சொன்னதில்லை! இப்போதோ, இந்த இலட்சியத்துக்கு, நேர்மாறான காரியம் நடைபெறுகிறது — மக்களோ, இந்தக் காரியத்தை முன்னின்று நடத்துபவர்கள், 'நாட்டுப் பற்று'க் கோலம் பூண்டிருப்பதால், மயங்கிப் போயுள்ளனர்—தமது உரிமைபறிபோவதை உணராமலுமிருக்கின்றனர்.

மெய்ப்பொருள் நாயனார் கதை, அரசியலில் நடைபெறுகிறது!—சிவ வேடம் அன்று—இன்று தேசியக் கோலம்!

மொழி, கலை, எனப், உயிர்ப் பிரச்னைகள் முதற்கொண்டு, வரி, அதிகாரம், எனும் பிரச்னைகள் வரையிலே, 'மத்ய சர்க்கார்' ஆதிக்கம் செலுத்துவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு விட்டது!

"இது என்ன அக்ரமம்! இந்தி மொழி ஏகாதிபத்யமா? எப்படி இதனை ஏற்பது?" என்று வெகுண்டு ஒருவர் கேட்கும்போதும் சரி, "சகல அதிகாரங்களையும் டில்லியிலே கொண்டுபோய்க் குவிக்கிறீர்களே, எங்கள் மாகாணத்திலே நாங்கள் என்ன வேலைதான் செய்வது— எதைச் செய்யத்தான் அதிகாரமிருக்கிறது" என்று ஒருவர் கேட்டாலும், "பணப் பெட்டியை டில்லியில் வைத்துக்கொண்டு, எங்களைப் பஞ்சைகளாக விட்டுவைத்தால், நாங்கள், பட்டம் சூட்டிக்கொண்டு, பலன் என்ன?" என்று சிலர் பதறிக் கேட்டாலும், "பழத்தைப் பறித்துக் கொடுக்கச் சொல்லி எடுத்துக் கொண்டு, எம்மைச் சருகுகொண்டு வாழுங்கள் என்று கூறுவதுபோல, வருமான வரி போன்ற பெரிய புள்ளியை நீங்கள் எடுத்துக்கொண்டு, வளராத வரிகளை எமக்கு என்று கூறுகிறீர்களே, எங்கள்மாகாணத்து நலனைக் கவனிக்க முடியாதே, நாங்கள் என்ன செய்ய" என்று எவரேனும் அழுகுரலுடன் கேட்டாலும், எல்லாவற்றுக்கும் ஒரே பதிலாக, பலமான மத்ய சர்க்கார் வேண்டும் —நாட்டுப் பற்றுடையவரின் திட்டம் இது-என்று கூறிவிட்டு, "இதோ எம்மைப்பாரீர்! எமது கோலத்தைக் காணீர்! கதர் ஆடை! காந்திக் குல்லாய்!" என்று பேசி, மக்களைமிரட்டி விடுகிறார்கள் — மக்களும், வேடத்தைக்கண்டு, மயங்குவதும் மிரள்வதுமாக உள்ளனர். இந்தத்துணைக்கண்

டத்தின் பல்வேறு பகுதிகள்—தனிப் பண்பும், தனிவரலாற்றுச் சூழ்நிலையும் கொண்ட பகுதிகள் யாவும், சுயாட்சியை இழந்து, அதன்பலனாக முழுவாழ்வும், முழுவளர்ச்சியும் பெற முடியாமல், உருக் குலையப் போகின்றன.

“சர்தார் படேல்,பம்பாயிலிருந்து விமானமூலம் டில்லிக்குப் பயணமானார்! விமானநிலையத்தில் அவரைவழி அனுப்ப கர்நாடகக் காங்கிரஸ் தலைவர்கள் வந்திருந்தனர்! திருவாங்கூர் சமஸ்தானக் காலாட்படையினர் மரியாதை செய்தனர்—விமானம் மைசூர் சமஸ்தானத்துடையது — விமானி, வங்காளநாட்டவர்!”-என்று,எழுதிப் படிக்க அழகாக இருக்கிறது என்பதற்காகவும், இத்தகைய ‘தர்பார்’ நடத்துவதற்குப் படேலுக்கு ஆசை இருக்கிறது என்பதற்குமா, ஒரு துணைக்கண்டத்தின், பல்வேறு நாடுகள், தத்தமது தனிப்பண்பை, தனி வாழ்வை, தன்னாட்சியை இழப்பது? நியாயமா? அரசியலின்படி கூட, இது அறமா? மக்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்!

மாகாணங்களின் நல்வாழ்வுக்குத் தேவையான, சகல காரியத்தையும், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, உட்பாதுகாப்பு, வளத்தை ஏற்படுத்துவதுபோன்ற சகல காரியமும், மாகாண சர்க்காரின் பொறுப்புகள். இவைகள், சரிவரசெய்யப்பட்டால்தான், அன்னியராட்சி ஒழிந்து, நமது ஆட்சி ஏற்பட்டது, அதன்பயனாகப் புதுவாழ்வு பெற்றோம் என்று மக்கள் பூரிப்புடன் கூறமுடியும். இந்த வெற்றி கிடைக்கவேண்டுமானால், மாகாண சர்க்காருக்குப்பணம் ஏராளமாக வேண்டும்—வளரக்கூடிய வரிவகை வேண்டும்.

புதியதிட்டம், முதலில், இதற்கு வழி அமைக்கவில்லை — மாகாணங்களுக்கென, ஒதுக்கி வைக்கப்படும், வரி, மாகாணங்களின் பெரிய பொறுப்புகளைநிறைவேற்றுவதற்குப் போதுமானது அல்ல. இதைக்கூறுவது, காங்கிரசாரை நிந்திப்பதாகக் கூறப்படும் நாமல்ல — காங்கிரஸ் மந்திரி, கோபால்ரெட்டியாரே, இது பற்றி, அடிக்கடி குறைப்படுகிறார்—குமுறுகிறார்.

அதிகாரங்களைப்பற்றியோ, கூற வேண்டியதில்லை-மத்தியசர்க்காரின், “அடுபிடி”களாகமட்டுமே, மாகாண சர்க்கார்கள் இருக்கமுடியும், எதற்கும் “டில்லி தேவதை”களின், ‘உத்தரவு’ தேவை! நாட்டுக்கு ஏதேனும் ‘நெருக்கடி’ என்று தோன்றினால், மத்திய சர்க்கார், இந்த ‘அல்ப சொல்ப’ அதிகாரத்தையும் கூட ரத்து செய்துவிடலாம்!

“நெருக்கடி” என்பதற்கு வியாக்யானம் கூறும் பொறுப்பும் மத்திய சர்க்காருடையது.

‘இந்து’ இதழ் எழுதுகிறது, “யாரோ ஒரு சிலர் எப்படியோ மாகாண அரசியலை, தேர்தலிலே கைப்பற்றிவிட்டால், அவர்களின் நிர்வாகம் நாட்டைக் கெடுக்கும் என்று மத்யசர்க்கார் கருதினால் உடனே, மாகாண சர்க்காரை நீக்கிவிட, வழி, ஏற்படுகிறது இதனால்” என்று எழுதுகிறது. இதற்குப் பெயர் பாசிசம் என்றால், கோபம் வரும், இந்துவுக்கு. மக்களிடம் கூறினாலோ, அவர்கள் ‘மெய்ப்பொருள்’ தேடுகிறார்கள், வேஷத்தைக் கண்டு ஏமாறுகிறார்கள்.

ஒருசிலர், இந்தத் திட்டத்திலே, உள்ள, குறைபாடுகளைச் சற்றுத் தைரியமாகவே கண்டித்தனர்— என்றாலும், அவர்களின் வாதங்கள் கேலி செய்யப்பட்டுவிட்டன, எச்சரிக்கைகளைத் துச்சமென்று தள்ளிவிட்டனர் முன்னணியுள்ளவர்கள்.

பேராசிரியர் ரங்கா மத்யசர்க்காரிடம், அளவுக்குமீறிய அதிகாரத்தைச் சுமத்துவது நல்ல அரசியல் திட்டமல்ல என்று எச்சரித்தார்.

திருவிதாங்கூரிலிருந்து சென்றுள்ள ஒருஉறுப்பினர், சமஸ்தானத்தின் வரிப்பணத்திலே பெரும் பகுதியை, மத்ய சர்க்கார் பெற்றுக் கொள்ளத்திட்டம் வகுத்திருக்கிறீர்களே,பெருந்தொகையை டில்லிக்குக் கொடுத்துவிட்டு, எங்கள் நாட்டு நல்வாழ்வுக்கான திட்டங்களை நிறைவேற்ற என்னசெய்வது? என்று கேட்டார்.

அசாம்மாகாணத்திலிருந்து வந்த அன்பர் அழுகுரலிலேயே பேசிப் பார்த்தார்!

எதற்கும், அங்கு இடம் தருவார் இல்லை—எல்லோருக்கும் ஒரே விதமான பதில்தான் தரப்பட்டது, “எம்மைப் பாரீர்! எமது கோலத்தைக் காணீர்!! என்ற பதில்தான்.

இந்தியதுணைக்கண்டத்துக்கு ஒரு அரசு, என்ற திட்டம் வகுக்கப்பட்டால், இப்படித்தான் மாகாணங்களை பட்டினிபோடும் திட்டமாக இருக்குமென்பதை அறிந்துதான், நாம், திராவிடநாடு, தனியாட்சி பெற வேண்டும் என்று கூறி வந்தோம்—கூறிவருகிறோம்.

அந்தத் திட்டம் மக்களின் கருத்துக்குப் புரியாதபடி செய்ய ‘தேசீயக் கோலத்தை’த்தான் ஒரு சிலர் மிக மிகச் சாமர்த்தியமாகப் பயன்படுத்துகின்றனர்.

ஆனால், ஒன்று கூறுவோம், உண்மையை ஒரு சிலரேனும் உணரத் தொடங்கிவிட்டனர். அதனால்தான் அரசியல் நிர்ணய சபையிலே பலர், ‘மத்ய சர்க்கார் அளவு கடந்த அதிகாரம்” பெறுகிறது, இது ஆபத்தானது என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளனர். அவர்கள் வெற்றி பெறாமற் போகக்கூடும்—ஆனால், அவர்களின் எச்சரிக்கை மட்டும் வீண் போகப் போவதில்லை.

அரசியல் திட்டம் அமுலுக்கு வந்தால், அவர்களின் எச்சரிக்கை, மக்களுக்கு, இன்று தெரிவதை விடத் தெளிவாகப் புரியும் — அப்போது. நாம் கூறிவரும் ‘இலட்சியத்தின்’ சார்பாக மக்கள் அணியணியாகத் திரள்வர் என்பது உறுதி.

இந்தியதுணைக் கண்டத்தை ஒரு குடைக் கீழ் ஆள முயற்சித்தவர்களின், ‘கதி’ பற்றி, வரலாறு, நன்கு நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

மகா அலெக்சாண்டர் காலமுதற் கொண்டு சர்தார் படேலின் காலம் வரையில், ஒரு நாலைந்து முறை, இதுபோன்ற முயற்சி, எடுத்துக் கொள்ளப்பட்டதுண்டு—ஒவ்வொன்றும் முறிந்ததாகவேதான் சரிதம் கூறுகிறது; அன்பை அடிப்படையாகக் கொண்ட அசோகர், அக்பர், ஆட்சியானாலும் சரி; ஆத்திரத்தை அடிப்படையாகக் கொண்ட அவுரங்கசீப்பின் ஆட்சியானாலும் சரி, பண்டைய நாட்களின் சிறப்பைச் சித்திரமாக்கவே எழுந்த சாம்ராஜ்யங்களெனப்படும், அர்ஷர், சமுத்ரகுப்தர், கனிஷ்கர், என்போரின் ஆட்சியானாலும் சரி, குப்த பரம்பரை, மராட்டிய மரபு, மொகல் வம்சம், என்ற எந்தப் பெயருடன் கிளம்பிய ஆட்சியானாலும் சரி, அவை எதுவும், நிலைத்து நின்றதாக வரலாறு கிடையாது. காரணம் என்ன? உரிமை வேட்கை கொண்ட மக்கள், கூண்டுக்கிளிகளாகி விடமாட்டார்கள்! ஒரு துணைக்கண்

டத்தை, விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய ஒரு சிலரின் எண்ணத்தின்படி, கடைசிவரை ஆட்டிப்படைப்பதென்பது, முடியாத காரியம்.

“ஐயோ! இந்தப் பாழாய்ப்போன டில்லியையா, தலைநகராகக் கொள்ள வேண்டும்! இது, பல சாம்ராஜ்யங்களின் சவக்காடு அல்லவா? என்று கிருபளானி கதறினார்—அதே விதமாக வேறோர் தோழரும், அரசியல் நிர்ணய சபையிலே பேசியிருக்கிறார். இடமல்ல, இதிலே முக்கியம், இயல்பு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும்!

டில்லிக்கும் தூத்துக்குடிக்கும்—இமயத்துக்கும் குமரிக்கும்—கதர் நூலினால், ஒரு ‘முடி’ போட்டுக் காட்டுகிறார்கள்! சரியா? அவசியந்தானா? என்பதை, புதுதிட்டப்பற்றிய பிரசனைகள் பேசப்படும் இந்த நேரத்திலேனும், காங்கிரஸ் நண்பர்கள், யோசித்துப் பார்க்கவேண்டுகிறோம். யோசிக்கும்போது, “தேசியக் கோலத்தை”யே நம்பி, தவறான முடிவுக்கு வராமலிருக்கவேண்டும், என்பதற்காகவே, துவக்கத்தில், மெய்ப்பொருள் நாயனார் புராணத்தைக் கவனப்படுத்தினோம்.

வெளிநாட்டு வெறியர்கள் இந்தத் துணைக்கண்டத்தின்மீது மோத நினைத்தால், நாம் ஒன்றுபடவும்—கூட்டாகப் பணிபுரியவும் — ஒரு அமைப்பு இருக்கட்டும்—அந்தப் பலத்தைத் தேடித்தர, “மாகாணங்கள்” தத்தமது வசதிக்கு ஏற்றபடி முன்வரவேண்டுமென்பதற்கான ஓர் திட்டம் தீட்டுவோம்—வேண்டாம் என்பாரில்லை.

ஆனால், ஒவ்வொரு பகுதியும்—அதிலும் சிறப்பாக, தனியாட்சி செலுத்திவந்த, செலுத்துவதற்குத் தகுதியும் திறமையும் வாய்ந்த, தனிப்பண்பு கொண்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளை, ஒரே பட்டியில் போட்டு அடைத்து அதிகாரமற்ற, பொருள் பலமற்ற இடங்களாக்கி, அவ்வளவு அதிகாரங்களையும் மத்ய சர்க்கார் எனும் ஒரே இடத்தில், குவித்துவிடுவது, நல்லதல்ல-நடைமுறைக்கு ஏற்றதல்ல-ஜனநாயகமல்ல-பாசிசத்துக்குத்தான் வழி கோலும்.

பேராசிரியர் லாஸ்கி கூறுவது போல, “மத்தியில் திமிர்வாத நோயும். கோடிகளில் சோகை நோயும்” கொண்ட அமைப்பு கூடாது. இப்போது தேசீயத் திருக்கோலத்தவர் தீட்டிடும் திட்டம், தாங்கமுடியாத அதிகாரத்தை மத்தியிலே குவிப்பதும், அதிகாரப் பசி நோயை மாகாணங்களில் புகுத்துவதுமாக இருக்கிறது. திட்டம் தீட்டுபவர்களின், “தேசீயத் திருக்கோலத்தை”க் கண்டு, ஏமாந்து, இந்தத் திட்டத்தின் தீங்குகளை உணராமல் இருந்துவிட வேண்டாம் என்று, காங்கிரஸ் நண்பர்களையே முக்கியமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

# எதனை மேற்கொள்வது?

திருப்பதி வேங்கடத்தான்கீழ்த்திசைக் கல்லூரியில் படித்துவரும் தமிழ் மாணவர் கழகத்தினர் ஒரு வரவேற்பு வாசித்தளித்தனர் மந்திரி பக்தவத்சலத்திற்கு. அவர் அதுகாலை சில கூறியுள்ளார். அதன் சுருக்கம் ‘தினமணி’ 5—11—48 இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

“மாணவர்கள் கேவலம் சம்பாவனை பெறுவதற்காகவே கல்வி கற்கக் கூடாது. சொந்த இலாபத்திற்காகக் கல்வி கற்கவேண்டுமென்றால் அதற்காக அரசாங்கத்தாரும் மற்றவர்களும் ஏன் பணம் செலவழிக்க வேண்டும்! ஆகவே மாணர்கள் பொது நலத்திற்காகத்தான் கல்வி கற்க வேண்டும்.”

கல்வி கற்பது சுயநலத்திற்கு மட்டுமல்ல; பொதுநலத்திற்கும் பயன் படல் வேண்டுமென்று பேசுகிறார் அமைச்சர். பொதுநலத்தை மட்டும் பெரிதென நம்பி காலங்கழித்துக் கொண்டிருக்கக் கல்வி கற்றவர்களால் மட்டுமல்ல, அமைச்சர் போன்றவர்களால் கூட முடியாது. கல்வி கற்பதில் சொந்த இலாபமும் பிரிக்கமுடியாத தன்மையில் பிணைப்புண்டு கிடக்கிறது. எதற்கும் ஓர் எல்லை உண்டு.

‘கல்வி அதிகமென்றே கற்றுவிட்டேன்’ என்று ஒரு புலவன், வயிற்றுக்கு வகை தேடிக்கொள்ள முடியாது விழித்துக் கொண்டிருந்த நிலையில், கல்வியைக் கடிந்துரைத்திருப்பது கவனிக்கத் தக்கது. அவன் வேண்டினது வயிறார உணவு. அவன் கற்றிருந்த கல்வி அதற்குப் பயன் படவில்லை; வழிகாட்டவில்லை. எனவே, கல்வியையே பழித்துக் கூறும் நிலை பெற்று விடுகிறான். ஆதலால் ஒருவன் பெறும் கல்வி வயிற்றுப்பாட்டிற்கு வழி செய்வதாகவும் இருத்தல் இன்றியமையாததாகும். இந்த மூலநோக்கம் பெறப்படும் கல்வியால் நிறைவேறினால் தான், மற்ற நல்லியல்புகளெல்லாம். அதனைச் சார்ந்து இருக்கமுடியும். இதனை மறந்து, சம்பாவனைக்காகக் கல்வியைக் கற்காதீர்கள் என்று பேசுவது, அழைத்ததற்கு ஏதாவது பேசித்தொலைக்க வேண்டுமே என்பதற்குப் பேசினதாகத் தான் கொள்ளப்படும். எதிர்பார்க்கும் பலனையும் உண்டாக்காது. கண்ணைக் கவரும் தேக அமைப்பு ஆவி இழந்துவிட்டால், வெறும் அழகிய பிணமாகத்தானே இருக்க முடியும்!

சம்பாவனைக்காகக் கற்காதீர்கள் என்று பேசும் இதே அமைச்சரும், இவரைச் சார்ந்த மற்ற அமைச்சர்களும் எத்தனை எத்தனை முறை, ஹிந்தி கற்க நாம் தவறிவிட்டால் சர்க்கார் உத்தியோகங்கள் நமக்குக் கிடைக்காமல் போய்விடும் என்று பேசி இருக்கிறார்கள்? திருப்பதியில் பேசினதை ஏற்றுக்கொள்வதா? இதற்கு முன் பேசியுள்ளதை ஏற்றுக் கொள்வதா? இவைகளில் எதனைத்தான் உண்மையாகக் கொள்வது?

“டில்லியிலுள்ள அரசாங்க அலுவல் அகங்களை தென்னிந்தியர்கள் நிர்வகிப்பதைப் பார்க்கலாம். எதிர் காலத்திலும், இன்றுள்ளதைக் காட்டிலும் அதிகாமாக இல்லையானாலும், இதே தன்மையில் நாட்டின் நிர்வாகத்தில் முக்கிய பங்கை தென்னிந்தியர்கள் மேற்கொள்ள வேண்டுமானால் இன்றைய இளைஞர்கள் ஹிந்தி கற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.”

இவ்வாறு பேசியுள்ளார் தொழில் மந்திரி சீதாராமரெட்டியார், லயோலா கல்லூரியில்.

ஒரு அமைச்சர், சம்பாவனைக்காகக் கல்வி கற்காதீர்கள் என்று, மாணவர்களுக்கு உபதேசம் செய்கிறார். மற்றொரு அமைச்சர், குமஸ்தா வேலைக்காகவே ஹிந்தி படிக்கவேண்டியது முக்கியம் என்று, ஹிந்தியின் அவசியத்தை வற்புறுத்துகிறார். இருவரும், இடந்தான், வெவ்வேறு—ஆனால் மாணவர்களுக்குத்தான் பேசி இருக்கிறார்கள். இந்த இருவர் பேச்சினையும் கேட்டிருந்த மாணவர்களுக்கு திகைப்புத்தானே ஏற்பட்டிருக்கும்? இவர்களின் பேச்சில் எதனை மாணவர்கள் கடைப் பிடித்து நடப்பது? ஒரு அமைச்சரின் பேச்சுக்கும் மற்றொரு அமைச்சரின் பேச்சுக்கும் ஏன் இவ்வளவு முரண்பாடு இருக்கிறது? இருவரும் காங்கிரஸ் அமைச்சர்கள்தானே? ஒரு விஷயத்தைக் குறித்து இவ்வளவு மாறுபாடான கருத்து கொண்டிருக்கக் காரணமென்ன? இடத்துக்கேற்றபடி பேசுகிறார்களா? அல்லது பேசப்படும் பொருளின் நுணுக்கங்களை நன்கு ஆராய்ந்து அறிந்துதான் பேசுகிறார்களா? இவர்கள் போக்கினை என்னென்று புரிந்துகொள்ள முடியவில்லையே?

# ★ எது உண்மை? ★

—✻—

'இந்தி கட்டாய பாடமில்லை; விருப்ப பாடமாகத்தான் வைத்திருக்கிறோம்' என்று நாவசைக்கத் தருணம் கிடைக்கும் பொழுதெல்லாம், நாடாளும் அமைச்சர்கள் முதல், தீந்தமிழில் நான்கு வார்த்தை கூட்டிப் பேசத் தெரியாத தொண்டர்கள் ஈருக, செல்லுமிடமெங்கும் நாள் தவருமல் பேசி வருகிருர்கள்.

இந்தி புகுத்தியுள்ள முறையிலே கட்டாயந்தான் இருக்கிறது என்று மதி சிறிது உடையவர்களும் புரிந்துகொள்ளும் முறையில், விளக்கிக் கூறியுள்ளோம் பன்முறை. நமக்கே சலிப்பு ஏற்படுகின்ற அளவிற்கு எடுத்துக்காட்டியுள்ளோம் இதனை. இந்த உண்மையை ஏற்கவில்லை அமைச்சர்கள். என்றும்போல் உண்மையை மறைத்தே உளறி வழிகிருர்கள்.

காமராஜர், தமிழ் நாட்டுக் காங்கிரசின் தலைவர், சென்னைத் தாணியை ஆளுவோரை அதட்டிக் கேட்கும் நிலையில் உள்ளவர், தம்மிடத்தில் அடக்கம் காட்டாதவர்களை அதிகார பீடத்திலிருந்து இறக்கும் 'ஆற்றல்' பெற்றுள்ளவர், அறிவித்துள்ளார், ஹிந்து மொழி புகுத்தியுள்ள தன்மை குறித்து, சென்ற கிழமையில். அருப்புக்கோட்டையில், காமராஜர் தலைமையில், இராமநாதபுரம் ஜில்லா தியாகிகள் மாநாடு நடைபெற்றது. அவர் தலைமையுரையில் குறிப்பிடுகிருர்:—

"பிராமணரல்லாத குழந்தைகளுக்கேதான் ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைத்தால் படிக்க முன்வருவார்களென்ற நம்பிக்கையுடன்தான் ஹிந்தியைக் கட்டாயபாடமாக வைத்துள்ளோம். பிராமண குழந்தைகள் அநேகமாக எல்லாரும் ஹிந்தி படித்துவிட்டார்கள்."

7—11—48 'தினமணி' இதழில், இது வெளிவந்திருக்கிறது. அதே தேதிய 'தினசரி'யிலும், இந்தச் சேதி இடம் பெற்றிருக்கிறது.

அமைச்சர்களைக் கேட்கிறோம், காமராஜர் கூறுவது உண்மையா அல்லது அமைச்சர்கள் அறைவது உண்மையா? என்று. ஒன்று மட்டும் நிச்சயம். இருவர் கூற்றும் உண்மையாக இருக்க முடியாது. ஒருவர் கூற்று உண்மையாகவும், மற்றவர் கூற்றுப் பொய்யாகவும் இருக்கவேண்டும். 4-ந் தேதி பேசி இருக்கிருர் காமராஜர், அதுவும், மந்திரிமார்களிலே ஒருவரான காளா வெங்கட் ராவ் முன்னிலையில். மறுத்துக் கூறவில்லை மந்திரியார். இதுவரையில் மந்திரிகள் கூறிவந்தது உண்மையாக இருக்குமானால், காமராஜர் தவருகப் பேசியுள்ளார் என்று, சர்க்கார் மறுப்புக்கூறி இருக்கவேண்டும். இதற்கு மௌனம் சாதிக்கிறது மந்திரி சபையும்!

காமராஜர் கூறிய பின்னராவது, ஒளிமறைவு இல்லாமல் உண்மை வெளியில் தெரிந்துவிட்ட பின்னராவது, மந்திரிகளுக்கு மனச்சாட்சி இடித்துக்கூறி இருக்குமே, அதன் பிறகாவது மந்திரிகள் முன்னுள் பேசிவந்ததற்கு மக்களிடம் மன்னிப்புப் பெற்றுகொண்டு, அல்லது இதுவரை கூறிவந்த பொய்க்குக் கழுவாய் தேடும் முறையிலாவது, இந்தி விஷயத்தில் உண்மை கூற முன்வரக்கூடாதா? இதனை அன்ருே மக்கள் எதிர்ப் பார்ப்பர்? பொய்யையே மெய்யாகப்பேசி வாழ்க்கை நடத்துபவரும் ஒரோர் வேளையிலாவது உண்மை கூற முனைவரன்ருே? அதுவும் இந்த அமைச்சர்கள் இடத்தில் எதிர்பார்ப்பது அளவுகடந்த ஒன்ருக இருக்கிறத!

"Mr H. Sitarama Reddi, Minister for Industries, said that he believed in voluntary study of Hindi as results achieved by compulsion would not be as good as by voluntary efforts. That was one of the reasons why the Government of Madras as made the STUDY OF HINDI OPTIONAL. He was aware that there was a section of the people who were trying to MISINTERPRET the policy of the Government.'

"தம்மிச்சையாக இந்தி கற்பதில் ஏற்படும் அளவிற்கு வற்புறுத்திப் போதிப்பதால் அதிக பலன் ஏற்படுவதில்லை என்பதனுல்தான், தம்மிச்சையாக இந்தி கற்பதில் தமக்கு நம்பிக்கை இருப்பதாக தொழில்மந்திரி சீதாராமரெட்டியார் கூறினுர். இந்தி கற்பதை விருப்ப பாடமாக சென்னை சர்க்கார் ஆக்கினதற்கான பல காரணங்களில் இதுவும் ஒன்று. சர்க்காரின், இந்தத் திட்டத்தை, மக்களில் ஒரு குழுவினர், திரித்துக் கூற முயற்சித்து வருவது தமக்குத் தெரியும்." இது 10—11—48 'ஹிந்து' பத்திரிகையிலே வந்துளது.

காமராஜர் போன்று, காங்கிரஸ் தியாகிகள் கூட்டத்திலே பேசவில்லை, சீதாராமர். எதிர்காலத்தில், நல்லபண்புடன், நாட்டுத் தலைவர்களாக மாறி, நல்லாட்சி அமைத்து, மக்களுக்குச் சுகவாழ்வு தேடித் தரவேண்டிய, கல்விபெறும் மாணவர்களிடத்தில், அத்தகைய உயர்ந்த கல்வியைத் தரும் லயோலா கல்லூரியில், ஹிந்திப் பேரவையில், பேசினுர் சீதாராமர் இவ்வாறு. இதனை மாணவர்கள் தட்டிக் கேட்கவில்லை. ஏதோ பேசுகிருர், வந்த விருந்தினரின் வாயுரையை என் நாம் தவறு என்று எடுத்துக் காட்டவேண்டும், அவரை அழைத்ததுதான் குற்றமேயன்றி அவர் அவ்வாறு பேசுவதில் குற்றமில்லை, என்ற பெருந்தன்மையோடு. மந்திரியைத் தட்டிக் கேட்காமல் விட்டு விட்டனர் போலும் மாணவர்கள்! எதிர்த்துக் கூறவில்லையே தவிர, சீதாராமரின் வாய்மையில், இளைஞர்களுக்குச்சந்தேகம் தோன்றி இருக்கத்தானே செய்யும்?

காமராஜர் பேசியது, காங்கிரஸ் தியாகிகள் மத்தியில். அடக்க ஒடுக்கமாக இருந்தால், ஐந்து ஏக்கர் நிலத்துடன் ஆட்சிப் பீடத்தை அலங்கரிக்கும் வாய்ப்பும் தங்களுக்கு என்ருவது கிடைத்தாலும் கிடைக்கலாம் என்னும் நம்பிக்கையில், மந்திரிகளின் பொருந்தாக் கூற்றை விளக்கிக் கூற வேண்டுமென்று காமராஜருக்கு விண்ணப்பித்துக் கொள்ளாமல், அந்தத் தியாகிகள் இருந்துவிட்டு இருக்கலாம். ஆனுல் மாணவர்கள், எதிர்காலத்தை ஆக்கவேண்டிய பொறுப்புடையவர்கள், சீதாராமருக்குச் சிகப்புக்கொடி காட்டாது, எதைவேண்டுமானுலும் கூறுங்கள் என்று இருந்துவிட்டது இரங்கத் தக்கதேயாகும்.

சீதாராமர் கூற்றுப்படி, விருப்ப பாடமாக வைத்துள்ள ஹிந்தியை, கட்டாயப் பாடமாக வைத்திருப்பதாக நாம் திரித்துக் கூறி வருகிருேம் என்று சீதாராமர், நம்மீது பழி சுமத்துகிருர். சீதாராமர் கூற்று, உண்மையானது என்று விவாதத்திற்கு ஏற்றுக் கொண்டாலும், திரித்துக் கூறும் பணியை நாம் மட்டுமா செய்கிருேம், காமராஜருமன்ருே, நம்முடன் சேராமலே, தியாகிகள் மத்தியில், திறம்படச் செய்திருக்கிருர். சீதாராமர் நம்மீது வீசியெறியும் குற்றச்சாட்டுகள் அவரையும் அறியாமலே, காமராஜர் மீது வீழ்ந்து வேதனை தருவதை, அமைச்சர் அறிய வேண்டுகிருேம். காமராஜர், ஹிந்தியைக் கட்டாயமாகத்தான் புகுத்திஇருக்கிருேம், என்று கூறினதின் மூலம், இந்த அமைச்சர்களின் வாய்மையில்—நடத்தையில் சந்தேகம் இருப்பதாகக் காட்டுகிருர். அவர் காங்கிரஸ் தலைவர். அவர் கொண்ட சந்தேகத்தை, நாம் இந்த அமைச்சர்கள் மீது கொள்வது, எந்த வகையிலும் குற்ற முடையதாகாது.

பிரஸ்தாப விஷயத்தில் வாய்மை எவர் பக்கத்தில் இருப்பதாக இருந்தாலும், மந்திரிமார்கள் தங்கள்கூற்றில்தான் வாய்மை இருப்பதாகத்தீர்மானித்தால் காமராஜரை மறுத்து அறிக்கைஒன்று வெளியிடவேண்டும். காமராஜர் கூற்றில் வாய்மை நிரம்பி இருக்குமானுல், அதனை விளக்கி விரிவான அறிக்கை ஒன்று வெளியிடுவதோடு, தமிழ்நாடு காரியக்கமிட்டியைக் கூட்டி, அமைச்சர்களின் பொய்மையைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றி, தவருன போக்கிற்கு அமைச்சர்களை விளக்கமும் கேட்கவேண்டும். இதனைத் தவிர காமராஜருக்கும், அவர் தலைமை தாங்கியுள்ள காங்கிரசுக்குந்தான், வெள்ளையர் வெளியேறிவிட்டபிறகு, வேறு வேலைதான் என்ன இருக்கிறது? செய்வாரா காமராஜர்?

# கொசுவைக் கொல்லும் இசை!

நாம் என்ன செய்வது! நம்மால் என்ன ஆகும்!—என்ற பெருமூச்சுப் பேச்சு நமது பாரம்பரிய வித்தை!!

என்ன நேரிட்டாலும், இயற்கைக் கோளாறு முதற்கொண்டு, வேந்தனின் கொடுங்கோன்மை வரையிலே, நாம் இதே மனப்பான்மையைத்தான் காட்டி வந்திருக்கிறோம்.

ஆறு, வெள்ளமானாலும், நாடு, காடானாலும், மன்னன், மிருகமானாலும், நாம், இவைகளைக் கட்டுக்குக் கொண்டு வரவோ, திருத்தவோ, முயன்றதில்லை — அந்த எண்ணத்துக்கே இடமளிப்பதில்லை. எல்லாம் சரியாக நடைபெறும்படி கவனித்துக் கொள்ள ஒருவர் இருக்கிறார்— அவர் இருக்கும்போதே, சில விபரீதங்கள் நேரிட்டால், நாம் எப்படித் தடுக்க முடியும்! நம்மால் ஆகிற காரியமா!!—என்று எண்ணியே, நமது முன்னோர்கள், பல பிரச்னைகளைக் கவனிக்காமலிருந்து விட்டனர்.

ஆழாழி கரையின்றி நிற்கவில்லையா!—நம்மாலா இந்த அற்புதம் நடைபெறுகிறது — கல்லினுள் தேரைக்கும் கருப்பைக்குள் முட்டைக்கும் ஆண்டவன் உணவளிக்காமலா போகிறார்— காட்டில் வளரும் பலகோடி உயிர்க்கு ஊட்டி உணவளிப்பதாரோ—என்றும் பேசி, மேதாவிகள் என்று மட்டுமல்ல, ஞானவான்கள் என்றும் பெயர் எடுத்துக் கொள்வதிலேயே, பலருடைய நாட்டம் இருந்துவந்தது. சிற்சில சமயங்களிலே, ஆண் பனையைப் பெண் பனையாக்கிவிடுவது, எலும்பை எழிலுடை மங்கையாக்குவது என்பனபோன்ற அற்புதங்கள் நடைபெற்றன என்றுகூறுவதும்கூட, தேவலீலைகளாகக் கருதிக் கூறப்பட்டவையே யொழிய, ஆராய்ச்சியினால் ஏற்பட்ட விளைவுகள் என்ற முறையிலே அல்ல.

குஷ்டம் அவனுக்கு — அவனைக் கண்டதும், என்ன தீவினை செய்தானோ முன்பு, இப்போது இப்படி அனுபவிக்கிறான், என்று எண்ணத்தான் இன்றும் நம்மில் பலருக்கு முடிகிறதே தவிர, குஷ்டநோய் ஏற்படும் காரணம் என்ன, இதை நீக்கும் முறைகள் யாவை, என்பன போன்றவைகளிலே, மனம் செல்வதே இல்லை. நமக்கு மட்டுமா! வைத்தியருக்கே கூடத்தான்!

என்னமோ அப்பா, என்னிடம் உள்ள அபூர்வ மருந்தைத் தருகிறேன் — உன் 'விதி' எப்படியோ, அதன்படி நடக்கட்டும், என்றுகூறித்தானே அவரும் மருந்தளிக்கிறார்.

இவ்வளவு, சோர்வு—சந்தேகம்—சலிப்பு — இருப்பதற்குக் காரணம், ஒரு சம்பவத்தையோ, நிலையையோ காணும்போது, ஏன் இவ்விதமிருக்கிறது, இதை என்னசெய்தால் மாற்றலாம் என்ற அறிவுச் சுறுசுறுப்பு ஏற்படாததுதான். ஆயிரமாயிரம் விஷயங்களை, இந்த மனப்பான்மை காரணமாக, நாம் கவனிக்காமலிருந்துவிட்டோம் — காலமாற்றத்தை, உலகின் மற்றப் பகுதிகளிலே உள்ள நிலைமைகளைக் கவனிக்கும் பண்பை இழந்துவிட்டோம். காக்கை ஏன் கருப்பாகவே இருக்கிறது—கருப்புக்கோழி ஏன்வெள்ளை முட்டை வைக்கிறது—கடற் தண்ணீர் ஏன் உப்பாகவே இருக்கிறது, என்று வேடிக்கை பேசிவிட்டு, எதற்கும் விளக்கம் பெற முயற்சிக்காமலேயே இருந்துவிட்டோம்.

மற்றவர்கள் இதுபோல் இல்லை.— நல்ல வேளையாக இல்லை — அவர்களும் நம்மைப் போன்றே இருந்துவிட்டால், உலகின் நிலை எப்படி இருந்திருக்கும்!!

நோய்க்குக் காரணம், தடுப்பு முறைகள், போக்கும் வகைகள், பரவ விடாதிருக்கும் வழிகள், இவைகளைப்பற்றிய ஆராய்ச்சியிலே, கவனம் செலுத்தினர் — செலுத்துகின்றனர்.

மழை பொழியவில்லை என்றால், கொடும்பாவி கட்டி இழுப்போமா, கோபாலபஜனை செய்வோமா, என்றுதான் புத்தி போகிறது. இதுவெறும் ஏமாளிப் புத்தி. இதிலேயே, எத்தரின் புத்தியும் வேலை செய்ய ஆரம்பித்தால், மழை பெய்வதற்கு வருண ஜெபம் செய்வது என்று ஆரம்பிக்கிறார்கள். இப்படிப்பட்ட விதமாகத்தான் நம்மவர்களின் சிந்தனைசென்று கொண்டிருக்கிறதே யொழிய, மேனாட்டு விஞ்ஞானிகள் போலவா, மழை இயற்கை நிகழ்ச்சிதான் என்றாலும், அதையே ஏதேனும் செயற்கை முறையால் நாம் உண்டாக்க முடியாதா, என்று செல்கிறது! அவர்களின் சிந்தனை அந்தத் துறையிலேயும் சென்று, இப்போது மழையை உண்டாக்கும் முறையையும் விஞ்ஞான ரீதியாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள் — இனி இத்துறையில் மேற்கொண்டு ஆராய்ச்சிகள் நடத்திய வண்ணம் உள்ளனர். இங்கு?

"வானமழை போலே
மேனி வண்ணம்
கொண்டான்"

என்று பாடிக்கொண்டே காலந் தள்ளுகிறோம். சிலஆண்டுகளுக்கு முன்பு வடக்கே ஒரு ஊரில், மழை இல்லாமல் போகவே, அவ்வூர்ப் புத்திசாலிகள், சூரியன் மீது கல்லை விட்டெறிந்தார்கள், மழைவேண்டும் என்று. பயிர் வளரவில்லை எதிர்பார்த்தபடி, என்றால், விதையால் வந்த தவறு, உழவுமுறையால் வந்த தவறு, ஏதேனும் பூச்சி புழு அரிக்கிறதா, அல்லது மண்ணின் சத்தே கெட்டுவிட்டதா என்பன போன்றவைகளிலே நம்மவர்களின் எண்ணம் போவதில்லை— பச்சையம்மனுக்குப் பொங்கலிடுவது—அரசமரத்துக்கு மஞ்சள் பூசுவது, என்று இப்படி ஏதாவதொரு அர்த்தமற்ற விஷயத்தின் மீதுதான் எண்ணம் போகிறது.

தமிழ்நாட்டுப் பிற்கால மன்னர்கள் பலர், மழை காலாகாலத்திலே பொழியாமற் போனால் என்ன செய்வதென்று, பயந்து, மழையைப் பொழியச் செய்ய, வருண ஜெபம் செய்வதற்காகப் பார்ப்பனர்களை, ஆஸ்தானத்தின் செலவிலே நியமித்தனர். வருண ஜெபம் செய்வதற்காகவே, அவர்களுக்கு மானியங்கள்—இனாம்கள்—தரப்பட்டன. தஞ்சை மாவட்டத்திலே, இப்படி வருண ஜெபம் செய்வதற்காக அளிக்கப்பட்ட இனாம்கள், இன்றும் அந்தப் பரம்பரையினரிடம் உள்ளன.

இயற்கை முறையிலே, ஏதேனும் கோளாறு காணப்பட்டால், அதாவது மழையே பெய்யாமலிருப்பது அல்லது மழை அளவுக்கு மீறிப்

பெய்வது, முதலிய ஏதேனும் நேரிட்டால், கடவுளின் கோபமே அதற்குக் காரணம் என்றுதான், பற்பல நாடுகளிலேயும் ஆதிநாட்களிலே எண்ணம் இருந்தது. பயங்கரமான இடியை, பகவானின் கோபச்சிரிப்பு என்றும், விழியைப் பழுதாக்கும் விதமான மின்னலை, அவருடைய கைவேலின் வீச்சென்றும்தான், அக்கால மக்கள் நம்பினர். எனவே ஏதேனும் பூஜைசெய்து கடவுளின் கோபத்தைப் போக்கினால், அவர் மனம் மகிழ்ந்து, இயற்கையை முறைப்படி நடந்துகொள்ளச் செய்வார் என்று நம்பினர்—அதற்கேற்றபடியே நடந்துகொண்டனர். ஆனால் அறிவுத் தெளிவு அங்கெல்லாம் ஏற்பட்டுக், கற்பனைகள், கட்டுக்கதைகள், ஆகியவற்றை மறந்து, காரண விளக்கத்தில் கவனம் செலுத்தி, ஆராய்ச்சிமனப் போக்கினராயினர்.

இங்கு மட்டுந்தான், இன்றும் அந்தப் பழைய நம்பிக்கை பழுதுபடாது இருக்கிறது. காரணம், அந்தப் பழைய நம்பிக்கையை அப்படியே வைத்துப் பாதுகாப்பதால் இலாபமடையும் சூது மதியினர் இங்கு இருப்பதுதான்.

“பஞ்ச பூதங்களாம் அப்பு, பிருதுவி, தேயு, வாயு, ஆகாயம் என்பனவற்றைப் பற்றி—” என்று ஆரம்பித்து பஜனை பாடுவதே போதும் என்று நாம் இருந்துவிட்டோம், மற்றவர்களோ, அவைகளை ஆராயத் தொடங்கிப், பல அரிய காரியங்களைச் சாதித்தனர் — இன்றும் சாதித்தவண்ணம் உள்ளனர்.

எவ்வளவு பெரிய இயற்கைக் கோளாறையும் கண்டு, அவர்கள் மிரண்டு, மனதை மரக்கடித்துக் கொண்டதில்லை, எவ்வளவு சிறிய சம்பவத்தையும், ஆராய்ந்து பயன்படுத்திக்கொள்ளத் தவறியதில்லை.

கோளங்களையும் ஆராய்கிறார்கள், கொசுவைப் பற்றியும் ஆராய்ச்சி நடத்துகிறார்கள்.

வானத்திலே வட்டமிட்டுப் பார்க்கிறார்கள், கடலுக்குள்ளே மூழ்கிப் பார்க்கிறார்கள் — எங்கெங்கு என்னென்ன காட்சிகள் உள்ளன, கருத்துகள் கிடைக்கின்றன, என்று, கண்டறிய.

அதன் பயனாக அவர்களால், நேற்று இல்லாததை இன்று உண்டாக்கிக் காட்ட முடிகிறது — நாளைய வாழ்வு, நேற்றைய வாழ்வைவிட, வசதிகள் நிரம்பியதாக இருக்கவேண்டும் என்ற நோக்கம் நிறைவேறுகிறது.

நாமோ, “இன்றைக்கு இருப்பாரை நாளைக்கு இருப்பரென்று எண்ணவோ திடமில்லை” என்று சோகக் கீதம் பாடிச் சோம்பிக் கிடக்கிறோம்.

கோளங்கள் முதற்கொண்டு கொசு வரையிலே, அவர்கள் ஆராய்ச்சி செய்கிறார்கள் என்று கூறினது, சொல்லடுக்கு அல்ல, உண்மை.

சென்றகிழமை, ஒரு ஆஸ்திரேலிய விஞ்ஞானி, ஏற்கனவே, ஆராய்ச்சிக்கு அகப்பட்ட நட்சத்திரங்கள் தவிர, வேறோர் புது நட்சத்திரம் இருப்பதாகவும், அந்த நட்சத்திரத்திலிருந்து ஒலிச்சக்தி கிளம்பியவண்ணம் இருப்பதாகவும், ஆராய்ச்சியால் கண்டறிந்து கூறினார்.

எங்கே இருக்கிறது அந்த நட்சத்திரம், எவ்வண்ணம் இருக்கிறது, என்பன போன்றவைகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை, ஆனால், ஒரு குறிப்பிட்ட பகுதியிலே, அந்த நட்சத்திரம் இருந்தாக வேண்டும், என்று நிர்ணயித்துவிட்டார்; மேற்கொண்டு ஆராய்ச்சிகள் நடந்தவண்ணம் இருக்கிறது—சில காலத்தில், புது உண்மைகள் பல வெளிவரக் கூடும்—புது நலன்களும் கிடைக்கக் கூடும்.

சென்ற கிழமை, மற்றோர் பிரபல விஞ்ஞானி, பிக்கார்டு என்பவர், கடலுக்கு அடியிலே உள்ள நிலைமைகளைக் காணும் கருத்துடன், அதற்கான கருவியைஅமைத்துக்கொண்டு கடலுக்குள்ளேசென்றார். அவருக்கு வயது அறுபத்துமூன்று! இந்தவயதிலேயும் அவருடைய ஆராய்ச்சி ஆர்வம் அப்படி இருக்கிறது. இனிக் கடலுக்குள் இரண்டரை மைல் ஆழம், சென்று பார்க்கப் போகிறாராம் என்ன உள்ளன என்பதை எல்லாம்.

செவ்வாய், சந்திரன், இவைகளை எல்லாம் கண்டறியும் ஆராய்ச்சி நடந்தபடி உள்ளன.

கிரஹங்களிலே காணப்படும் நிலைமைகளை எல்லாம் ஆராய்கிறார்கள்.

இந்த மனப்பான்மையின் காரணமாக, எவ்வளவோ, பயனுள்ள முறைகளையும், வசதி தரும் வழிகளையும் கண்டுபிடிக்க முடிகிறது.

கோளம்,மட்டுந்தானா, ஆராய்ச்சியாளர்களின் கவனத்திற்கு வந்தது. முன்னாலே கூறியிருக்கிறபடி, கொசுவும்தான்!

சில பூபாகங்களில், வளம் உண்டு, மழை இருப்பதால்-ஆயினும் அவை, மனிதர் வாழ்வதற்கு ஏற்றபடி இல்லாமல், போய்விட்டன.

நாம் கூறுவோம், கல்லிலே நார் உரிப்பாயோ! மணலைக் கயிறுக்கு வாயோ!—என்று.

அவர்கள் அவ்விதம் கூறுவதில்லை. மக்களின் வாழ்க்கைக்கு, வசதியற்ற முறையிலே உள்ள அந்தச் சதுப்பு நிலத்தையும் அவர்கள், ஆராயாமலில்லை.

சில சதுப்பு நிலப் பகுதிகளிலே, மனிதனையும், பச்சைப் பயிரையும் வாழவிடாமல் செய்வது, துஷ்ட மிருகங்கள்கூட அல்ல, மிக மிகச் சாதாரணமான ஜீவன்-கொசுக்கள்!

இவைகளின் தொல்லையை நீக்க முடியாது, தத்தளித்தே, அந்த நிலப் பகுதிகளை, விட்டுவிட நேரிட்டது.

அமெரிக்க கண்டத்திலே கியூபா எனும் பிரதேசத்திலே, இப்படிப்பட்ட சதுப்பு நிலம் இருக்கிறது—கொசுத் தொல்லை சகிக்க முடியாததாகிவிட்டது. நோய் பரவலாயிற்று! கொசுக்களை அழித்தாலன்றி,வாழ்வு சுகப்படாது என்று தெரிந்தது. அதற்கு என்ன வழி என்றும் ஆராயத் தொடங்கினர்.

மார்டின்—சி—கான். என்ற ஆராய்ச்சியாளர், இந்தத் துறையிலே வேலை செய்து, வெற்றியும் பெற்றுவிட்டார். கொசுக்களைப் பிடித்து அழிக்கும், ஒரு அற்புதமான ‘வலை’யை அவர் கண்டுபிடித்து, அமெரிக்க சர்க்காருக்குத் தந்திருக்கிறார். எவ்வளவு நுண்ணறிவு இந்த ‘வலை’ அமைக்க, உபயோகப்பட்டிருக்கிறது, என்பதைக் கவனியுங்கள்.

ஆறடி உயரம்—மூன்றடி அகலம் உள்ள, ஒரு பெட்டி; அதனுள் மின்சாரத்தால் இயங்கும் திரைகள். இந்தப் பெட்டி, பாடுகிறது-கொசுப் பாட்டு—அதிலும் காதல் பாட்டு!!

பெண் கொசுவின் சத்தத்தை மின்சாரத் துணையால் பதிவுசெய்து கிராமபோன் பிளேட்டுகளைத் தயா

(16-ம் பக்கம் பார்க்க)

# மாநாடு முடிந்தது!

மாநாடு முடிந்துவிட்டது. இரண்டு வாரம் நடைபெற்றது. இடை இடையே விருந்து, வரவேற்பு, வாழ்த்துபசாரம் போன்ற நட்பைப்பெருக்கும் நற்செயல்களும் ஏராளமாக நிகிழ்ந்தன. இந்த மாநாட்டிற்கு, முக்கிய பொறுப் பேற்றுக்கொண்டிருந்த நாடு இங்கிலாந்து. இதன் வெற்றியிலும், மாநாட்டில் மனம் திறந்து பேசிக் கொள்ளப்பட்டபடி செயலாற்றுவதிலும், அதிக அக்கறை கொண்டிருப்பதும் இங்கிலாந்துதான்.

ஜவஹர், மன்னர் தம்பதிகளுடன் விருந்துண்டார், நாடகம் பார்க்கச் சென்றார், பவுண்ட் பாட்டன் மாளிகையில் ஓய்வுகொண்டார், அதனால் உற்சாகம் பெற்றார், சிறந்த சிற்பிக்கு தன் உருவைக் காட்டினார் என்பனபோன்ற செய்திகள் பத்திரிகையில் பிரமாதப் படுகின்ற அளவுக்கு, இன்று இந்தியாவிற்குப் புதிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எந்த ஜவஹரை சிறையில் தள்ளி தாணியாண்டதோ, அதே பிரிட்டிஷ் சிங்கம் இன்று அவரை வரவேற்று உபசரிக்கிறது. இங்கிலாந்தின் பிரதமர் பீடத்தில் அட்லி இருக்கிற காரணத்தால் மட்டும் இந்தப் புதிய மாற்றம் ஏற்பட்டு விடவில்லை. இங்கிலாந்திலுள்ள பெருவாரியான மக்களின் மனத்தில் ஏற்பட்ட மாறுதலின் விளைவாகத்தான், சர்ச்சில் நீக்கப்பட்டு, அந்த இடத்தில் அட்லி அமர்த்தப் பட்டிருக்கிறார். மக்களுக்கு உண்டான இந்த மாற்றத்திற்கும் காரணம், ஏகாதிபத்திய அரசாக இருந்த இங்கிலாந்து, அதனுடைய பொருளாதார அஸ்திவாரம் சரிந்துபோய், சமதர்மத்தை மேற்கொண்டாலன்றி, தங்களுக்கு வாழ்வுகிடைக்காது என்பதைச் சிக்கற மக்கள் தெரிந்து கொண்டதேயாகும். அங்கு காலத்தின் நிலையையும், மாறும் உலகின் போக்கையும் எடுத்துக்கூறும் தலைவர்களும், அதனை நன்கு ஆராய்ந்து தெளிவு பெறவும், தெளிந்தவண்ணம் செயலாற்றத்துணிவும் கொண்டுள்ள அறிவாற்றல் மிகுந்தவர்களாக இங்கிலாந்தில் மக்கள் உள்ளனர். எந்தக்காலத்தில், எந்தெந்த வேலைக்கு, யார் யாரை அமர்த்தினால்; மக்கள்நிலை கீழாகாமல், வளம்பெற்று வாழ்வார்கள் என்பதிலேயே, அங்குள்ள மக்களின் கருத்தனைத்தும் படிந்திருக்கிறது. தங்களின்தேவையைத்தெரிந்து கொள்ளவும், அந்தத் தேவைகளைத் தேடித்தரும் திட்டங்களைக் கொண்ட ஆற்றல் மிக்கவர்களை ஆட்சியில் அமர்த்தி, அவர்களுக்கு ஆளும் உரிமையைக் கொடுத்து, அன்போடு ஆதரித்து,வாழ்வைச் செப்பனிட்டுக் கொள்ளும் சிறந்த கல்வியும், பண்பும் கொண்டவர்களாக அங்கு மக்கள் உள்ளனர். அனைவரும் வாழ்வு பெறுவதற்கு, சமதர்மத்தைக் கைக்கொண்டாலன்றி, நெருக்கடியான உலகச் சூழ்நிலையிலிருந்து இங்கிலாந்தையும் தங்களையும் காப்பாற்றிக் கொள்ளமுடியாது என்னும் மறுக்கமுடியாத உண்மையை, அந்த மக்கள் தெரிந்துகொண்டதன் விளைவாகத் தான், போர்க்காலத்தில் தங்களைத் திறமையாக காப்பாற்றின சர்ச்சில் துரையைத் துறவு பூணச் செய்துவிட்டு, அட்லியையும் அவர் சகாவான கிரிப்ஸையும் ஆதரித்தனர். பாசமும் பற்றுதலுந்தான், பாராளுவோரைத் தேர்ந்தெடுப்பதற்குள்ள அளவு கோல் என்று, அந்தமக்கள் நம்பிஇருந்தால், அதன்படி செயலாற்ற முனைந்திருந்தால், இந்தியாவிற்கு விடுதலையும் — பாக்கிஸ்தான் அமைவதும்-சிலோன் சிறப்படைவதும்-மனிதசிந்தனைக்கே கட்டுப்படாத விஷயமாகப்போயிருக்கும். அதுவுமல்லாமல் மீண்டும் ஓர் பெரும் போர் ஏற்பட்டும் இருக்கும். அதுகாலை இங்கிலாந்து மக்களுக்கு வாழ்வு கிட்டி இருக்காது. சாவுதான் சம்பவித்து இருக்கும். சொந்த அனுபவத்தால் இந்த உயர்ந்த பண்பைப் பெற்றுள்ள இங்கிலாந்து மக்களை ஜவஹர் பெருமைப் படுத்திக் கூறினதில் வியப்பொன்றுமில்லை.

ஏகாதிபத்திய இங்கிலாந்து இன்று இல்லை. அந்த இடத்தில் சமதர்ம இங்கிலாந்துதான் இருக்கிறது—ஏட்டில் குறித்துள்ள அளவையைக் கொண்டு, இங்கிலாந்திலுள்ள இன்றைய ஆட்சி முறையை அளந்து பார்ப்பது, அவசியமுமில்லை; அது பொருத்தமற்றதும் ஆகும். மக்களின் மனவளத்தையும், அரசியல் அறிவாற்றலையும், முன்னர் ஆண்டவர்கள் போக்கினையும் பொறுத்திருக்கிறது, அந்தந்த நாட்டில் ஆட்சி முறை அமைவது. எவ்வளவு குறைபாடு உடையதாக இருந்தாலும், இங்கிலாந்து சமதர்ம லட்சியத்தை நோக்கிச்சென்று கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. சர்ச்சில் சர்வாதிகாரியாவதாக இருந்தாலும், கிரிப்ஸ் சர்வாதிகாரியாக ஆவதாக இருந்தாலும், இருவரின் லட்சியங்களிலும் பெரியதோர் முரண்பாடுகள் இருந்தபோதிலும், இங்கிலாந்து மக்களின் பண்பு, இந்த இருவரின் சர்வாதிகாரப் போக்கை ஒருநாளும் மேற்கொள்ளாது.

மாநாட்டிலே பேசப்பட்டவிஷயங்கள் மூன்று என்று கூறப்படுகிறது. பொருளாதாரம், பாதுகாப்பு, உலகச் சூழ்நிலை ஆகிய மூன்று பொருள் பற்றி பேசப்பட்டிருக்கிறது. நியூஸிலாந்து,இந்தியா,பாக்கிஸ்தான்,தென் ஆப்ரிக்கா, ஆஸ்ட்ரேலியா, கனடா, சிலோன், தென்ரொடீஷ்யா, ஆகிய காமன்வெல்த் நாடுகள் இங்கிலாந்து கூட்டிய இந்த மாநாட்டில் கலந்து கொண்டன.

இந்தியா,பாக்கிஸ்த்தான்,சிலோன் ஆகிய மூன்று நாடுகள்தான் முன்பு இருந்து வந்த உறவுமுறையில் தலைகீழ்மாற்றம் ஏற்பட்டு, புதியநிலை பெற்று மாநாட்டில் கலந்து கொண்டன. இந்த நாடுகளுக்குத்தான், புதியபுதிய தொழில்களைக் கண்டு, மக்களின் வறுமையைப் போக்கி, வாழ்க்கைத் தரத்தைஉயர்த்தி, நாட்டுக்கு நலம்பல தேடவேண்டிய நிலை இருக்கிறது. அதுவும் உடனடியாகச் செய்து தீரவேண்டிய நிர்பந்தத்தில் இருக்கின்றன. மடமை, வறுமை ஆகிய இரண்டுந்தான் இங்கு மக்களிடம் பெரிதும் குடிகொண்டிருக்கின்றன. புதுப் புதுத் தொழில்களைக் காணுவதின் மூலந்தான் இந்த இரு கெடுதிகளையும் தொலைக்க முடியும். புதிய தொழில்களைக் காணவேண்டுமானால், அதற்கான இயந்திர சாதனங்கள் ஏராளமாகவேண்டும். இன்றைய சூழ்நிலையில், அதற்கான சக்தி கொண்டிருக்கும் நாடு அமெரிக்காவும், இங்கிலாந்தும்தான். சென்றகால வேதனைமிக்க நிகழ்ச்சிகள் அனைத்தையும் மறந்து, பெருந்தன்மையோடு உறவு முறையை மேற்கொண்டால்தான், இது சாத்தியமாகும். இங்கிலாந்துதான் நம்மிரு நாடுகளுக்கும் கடன் கொடுக்கவேண்டி இருக்கிறதே, அதற்

காகக் கிட்டிபோட்டு இயந்திர சாதனங்களைப் பெற்றுக் கொள்ளலாமே, அதற்கு முன்னாள் பிரிட்டன் இழைத்த கேடுகளை மறந்து நடக்கவேண்டிய அவசியமென்ன என்று, ஆத்திரப்படும் தேசியவாதிகளும் இருநாடுகளிலும் உள்ளனர் என்பது நமக்குத் தெரியும். அவர்கள் இங்கிலாந்திலிருந்து இயந்திரங்களைப் பெறுவது மட்டும் போதாது, இங்கிலாந்து மக்கள், எந்த அளவிற்கு மனமாற்றம் பெற்றிருந்தால், முன்னர் நமது பிடியிலே சிக்கிக் கிடந்த இந்தியாவிற்கு இத்துணை மரியாதை காட்டுவதா என்று கருதாமல், இந்தியாவின் பிரதிநிதியைக் கண்ணியப்படுத்துகிறார்கள் என்பதைக் கவனத்தில் வைக்க வேண்டும். இந்தச் சிறந்த பண்புதான் தேவைப்படுகிறது, எடுத்துக் கொள்ளும் எந்தக் காரியத்தையும் வெற்றியாக முடிப்பதற்கு. பண்டிதரின் பேச்சு, இங்கிலாந்துடன் ஒத்த நிலையில் நட்புமுறையுடன் சேர்ந்து வாழ்வதையே விரும்பக்கூடியமுறையெனச் சுட்டிக்காட்டுகிறது.

தென்ஆப்பிரிக்காவில், இந்தியர்கள் இழிவாக நடத்தப்படுகிறார்கள். இந்தியர்களின் குடிவாழ் உரிமையைச் சட்டத்தின் மூலம், தென் ஆப்பிரிக்க சர்க்கார் தடுக்கிறது. அதுவும் காமன்வெல்த் நாடுகளிலே ஒன்றுதான். நிற வேற்றுமை காட்டிக் கொடுமைப்படுத்துவதும், மற்றவர்களுக்குள்ள உரிமையை இந்தியர்களுக்கு அளிக்க மறுப்பதும் தோழமைக்குப் பொருந்தாது. இந்த மாநாட்டில் இது குறித்தும் பேசப்பட்டுத்தான் இருக்கவேண்டும். விரைவில் இதற்குப் பரிகாரம் கிடைக்குமென்று நம்புவோம்.

அடுத்தபடியாக, பாகிஸ்தான் இந்தியா பிணக்கு, கசப்பு, காஷ்மீர் பள்ளத்தாக்கை இரத்தத்தால் நிரப்பிக் கொண்டிருக்கிறது. இருநாட்டிலும்ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் உள்ளத்தில் நல்ல மாற்றம் ஏற்படவேண்டும். பிரிட்டிஷ் மக்களின் சிறந்த பண்பை பாகிஸ்தான் பிரதமர் லியாகத்தும், ஜவஹரும் பெருமைபடுத்திப் பேசி இருக்கிறார்கள். அந்தப் பண்பைப் பேசுவதற்கு மட்டும் ஒரு பொருளாகக் கொள்ளாமல் சொந்த விஷயத்திலும் கையாள முயலவேண்டும். பாகிஸ்தான் ஏற்பட்டதில் இருக்கும் எரிச்சல் இன்னும் காங்கிரஸ் தலைவர்களுக்கு மாறிவிட்டிருக்கும் என்று சொல்வதற்கில்லை. எதிர்பார்த்தபடி கிடைக்கவில்லையே, கேட்டபொழுது எவ்வளவு எதிர்ப்புக் காட்டினார்கள் என்பனபோன்ற ஆத்திரம் பாகிஸ்தானிகளுக்கும் இருக்கும். இருநாட்டிலும், ஆட்சிப் பீடத்திலும், தங்கள் தங்கள் சொந்த அரசியல் கட்சிகளிலும் முக்கியமான இடங்களிலே இருப்பவர்களின் உள்ளக் கிடக்கையே இதுவன்றி, இரு நாட்டிலும் உள்ள மக்களின் மனநிலையும் இதுதான் என்று கூறிவிட முடியாது. அவர்கள்விரும்புவதெல்லாம், அரசியல் விடுதலை கிடைத்த பின்னரும் வயிறார உண்பதற்கு ஒன்றும் இன்னும் கிடைக்கவில்லையேஎன்பதுதான். இந்த நல்ல காரியத்தை மக்கள் அனைவருக்கும் தேடித்தருவதில்தான் இரு நாடுகளின் பாதுகாப்பும் அமைந்திருக்கிறது. ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கு மக்களின் திருப்தியான வாழ்வுதான் என்னும் உண்மையை மறந்து, வீட்டுக்கொரு போலீசும், தெருவிற்கு இரண்டு இராணுவ வீரரும், நக்ரெங்கும் நவீனப் படைகளையும் வைத்துப் பாதுகாத்து விடுவதால் மட்டும், நாட்டின் பாதுகாப்பு அமைப்புப் பூர்த்தியாகி விடாது.

காஷ்மீர் பிரச்னை, அங்குள்ள மக்களின் முடிவிற்கு விடப்பட வேண்டும். போர்க்களத்தில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்னையாக அது இனியும் இருக்கக்கூடாது. இதுபற்றியும் இங்கிலாந்திலே பிரதமர் அட்லி, தம்முன்னிலையில் இருநாடுகளின் பிரதமரையும் சந்தித்துப் பேசச் செய்தாராம். நல்ல முடிவு ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இதோ சிங்களத்தில், அங்கு குடியேறியுள்ள தமிழர்களுக்குக் கேடு பயக்கும் திட்டத்தை நிறைவேற்ற பிரதமர் சேனநாயக் தயாராகிறார். சிங்களமக்களை வறுமையில் கிடந்துழலும்படி விட்டுவிட்டு, தமிழர்களுக்கு மட்டும் தனிச் சலுகை காட்ட வேண்டுமென்பதல்ல நமது கட்சி. சிங்களவர்மீதுதமிழர்கள்அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் அளவிற்குத் தமிழர்களுக்கு உரிமை வேண்டுமென்பதல்ல நமதுவாதம். மனிதாபிமானத்தோடு சிக்கல்கள் தீர்க்கப்படவேண்டுமென்பதே நமது விருப்பம்.

இந்தியா, பாகிஸ்தான், சிலோன் ஆகிய மூன்று நாட்டுப் பிரதமர்களும், இங்கிலாந்தில் பல இடங்களைச் சுற்றிப் பார்த்திருப்பார்கள். அதிகார பீடத்தில் அமர்ந்திருப்பவர்களிடம் மட்டுமல்லாமல் மற்ற அறிஞர்களையும் சந்தித்திருப்பார்கள். இதிலிருந்து அவர்கள் எவ்வளவோ அனுபவம் பெற்றிருப்பார்கள் என்றுதான் சொல்லவேண்டும். மக்கள் தயவால் ஆளும் உரிமை பெற்றவர்கள், அதிகார மயக்கத்தில் அறிவிழந்து நடந்துகொள்கிறார்களா அல்லது மேலும் மக்கள் ஆதரவைப் பெறவும், தேர்தலுக்கு முன்

(2-ம் பக்கம் பார்க்க)

14-ம் பக்கத் தொடர்ச்சி

ரித்திருக்கிறார். இந்தப் பிளேட்டுகளினால், பெட்டிக்குள்ளே பெண் கொசுவின் பாட்டுக் கேட்கிறது. இந்த 'இசை' கிளம்பியதும், காதற் பாட்டல்லவா, கொசுக்கள், இலயித்து விடுகின்றனவாம்—கீதம் கேட்கும் இடத்துக்கு வருகின்றன, கும்பல் கும்பலாக-பெட்டிக்குள்ளே போகின்றன—அங்கே அமைக்கப்பட்டுள்ள திரைகள் உள்ளனவே, அவைகளிலே சிக்கிச் சாகின்றன!

எவ்வளவு சிந்தனையைச் செலவிட்டிருக்க வேண்டும், இப்படி ஒரு கருவி அமைக்க.

கொசு, விஷயந்தான்,என்றாலும், ஆராய்ச்சியாளர்களின் 'மூளை' இது பற்றியும் சிந்திக்காமலில்லை. இந்தக் கருவி கண்டறிவதற்கான செலவை, அமெரிக்க சர்க்கார் ஏற்றுக்கொண்டதாம். இந்த 'பாடும் பெட்டி'யின் விலை, சுமார் இருநூறு டாலர் ஆகிறதாம்.

கோளங்கள் முதற்கொண்டு கொசு வரையிலே, விஷயங்களை அறியவும், விளக்கம் பெறவும், அவர்களின் அறிவு வேலை செய்கிறது; நாமோ, இன்னமும், 'கல்லானை கரும்பு தின்ற' கதையைப் படித்து மகிழ்ந்துகொண்டு இருக்கிறோம்.

●

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street, Kancheepuram.